பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 29 செவ்வாய்க்கிழமை 14.01.2020 கதிர் 70

இனி இது ரகசியம் அல்ல!

கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளோடு மீண்டும் நாட்டில் ராஜபக்ஷக்கள் யுகம் ஆரம்பமாகி விட்டது என்பது வெளிப்படையானது.

வரும் நாடாளுமன்றத் தேர்தல்களோடு அந்த Daynastyயின் விரிவு மேலும் பக்கம் 02

# ஜெனீவாக் கடப்பாட்டில் இருந்து இலங்கையை விலக விட முடியாது



## பிரிட்டிஷ் பிரதமரின் விசேட தூதுவரிடம் சம்பந்தன், சுமந்திரன் நேற்று விளக்கம்

கொழும்பு. ஜனவரி 14

ஐந்து வருடங்களாக சர்வதேச ரீதியிலான மூன்று தீர்மானங்கள் மூலம் தான் ஏற்றுக் கொண்ட கடப்பாடுகளில் இருந்து இலங்கை தப்பி, நழுவிச்சென்று விட அனுமதிக்கக் கூடாது; அனுமதிக்கவும் முடியாது.

ஜெனிவாவில் மனித உரிமைகள் கவுன்ஸிலில் தானும் சேர்ந்து அனுசரணைப் பணி வகித்து, பிரேரித்து நிறைவேற்றிய தீர்மானங்களை இலங்கை முழு அளவில் நடைமுறைப்படுத்துவதற்கான சகல விதமான அழுத்தங்களையும் சர்வதேச சமூகம் இலங்கை மீது பிரயோகிக்க வேண்டும்.

– இவ்வாறு பிரிட்டிஷ் பிரதமரின் விசேட பிரதிநிதியான கரித் பெய்லியிடம் விளக்கமாகவும் தெளிவாகவும் எழுத்துரைத்திருக்கின்றனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும். பக்கம் 03



## மைதானத்தை மீட்பதற்கு மாணவர்கள் போராட்டம்



மன்னார், ஜன.14

விளையாட்டு மைதானத்தை மீட்டுத்தருமாறு கோரி மன்னார் கருங்கண்டல் பக்கம் 03

## சபாநாயகர் கரு ஜயசூரிய விரைவில் அதிரடி முடிவு!

கொழும்பு, ஜன. 14

சபாநாயகர் கரு ஜயசூரிய அதிரடி அரசியல் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளத்தயாராகி வரு பக்கம் 03

## தேசிய பொங்கல் விழா ரத்து

கொழும்பு, ஜன. 14

நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்டங்களையும் ஒன்றுபடுத்தி கடந்த அரசு முன்னெடுத்த தேசிய பொங்கல் விழா இம்முறை ரத்துச் செய் பக்கம் 03

## 200 தேள்களை சீனாவுக்கு கடத்த முயன்றவர் கைது!



கொழும்பு, ஜன. 14

இலங்கையிலிருந்து 200 தேள்களைச் சீனாவுக்கு கடத்த முற்பட்ட சீனக் குடிமகன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பக்கம் 03

## 46 நாள்களுக்குப் பின்னர் நாடாளுமன்றம் கலைப்பு

### அரசு தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 14

நேற்றிலிருந்து முதல் 46நாள்களுக்குப்பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருப்பதாகக் கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். பக்கம் 03

## பிரதமரின் அதிகாரங்களை கைப்பற்ற கோட்டா முயற்சி

### எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 14

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமருக்கு காணப்படும் அதிகாரத்தைத் தன்னகப்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறார் என எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

நேற்றுத் எதிர்க்கட்சி தலைவர் பக்கம் 03

## 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு மார்ச்சுக்கு முன் அரச வேலை

### கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 14

50 ஆயிரம் உள்வாரி மற்றும் வெளிவாரிப் பட்டதாரிகள் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் அரச சேவைக்குள் இணைத்துக் கொள்ளப்படுவர் என்று கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இந்த நியமனத்தின்போது பக்கம் 03

## கிழக்கு பல்கலை மருத்துவபீட மாணவனைக் காணவில்லை!

மட்டக்களப்பு, ஜன.14

கிழக்குப்பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தின் மாணவன் ஒருவர் காணாமல் போயுள்ளார். அவரைத் தேடும் பணிகள் முன்னெடுக் பக்கம் 03



## அபிவிருத்தி என்னும் போர்வையில் மறைமுகமாக பௌத்த மயமாக்கல்

### அரசின் திட்டம் அதுவே என்கிறார் கஜேந்திரகுமார்

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், ஜன. 15


கடந்த காலங்கள் போன்று நேரடியாக இனவாதப் போக்கில் அல்லாமல் மறைமுகமாக அபிவிருத்தினும் போர்வையில் வடக்கு – கிழக்கில் பௌத்தமயமாக்கலை ஏற்படுத்துவதுதான் அரசின் திட்டமிட்ட நோக்கம் என எச் பக்கம் 03

## அரசு மோசமான விளைவுகளை ஜெனீவாவில் சந்திக்க நேரிடும்!

### எச்சரிக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி

கொழும்பு, ஜன.14

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு சிறுபான்மை இன மக்களைக் கவனத்தில் எடுக்காமல்செயற்பட்டுவருகின்றது. அத்துடன், சர்வதேசத்துடன் முரண்படும் வகையில் கருத்துக்களையும் வெளியிட்டு வருகின்றது. எனவே, இம்முறை ஜெனீவாவில் அரசு எதிர் விளைவுகளைச் சந்திக்க வேண்டி பக்கம் 03



காலைக்கதிர் Kalaikathir



# அச்சமின்றி தீர்மானங்களை மேற்கொள்ள நான் தயார்!

## ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 14

நாட்டு மக்களின் நன்மைக்காக தேவையான அனைத்து தீர்மானங்களையும் மேற்கொள்ள நான் தயாராக உள்ளேன். மேற்கொள்ளும் அந்த அனைத்து தீர்மானங்களினதும் பெறுபேறுகளை நாட்டுக்கும் மக்களுக்கும் பெற்றுக்கொடுக்க அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன். இந்தநோக்கத்துடனானவேலைத் திட்டங்கள் காணப்படுமாயின் எந்தவித சவால்களையும் வெற்றிகொள்ள நான் தயாராக உள்ளேன்

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

2025ஆம் ஆண்டளவில் 10 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிக வருமானத்தைப் பெறும் இலக்கினை அடைவதற்கான துரித பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யக்கூடிய பிரதான துறையாக சுற்றாலா துறையை மேம்படுத்த வேண்டும்.

இந்த துறையில் அனுபவமும் அர்ப்பணிப்புமிக்க திறமையான குழுவொன்று எமக்கு அவசியமாகும். அனைத்து படிமுறைகளிலும் துரித பெறுபேறுகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். நாட்டு மக்களின் நன்மைக்காகத் தேவையான அனைத்து தீர்மானங்களையும் மேற்கொள்ள நான் தயாராக உள்ளேன்.

மேற்கொள்ளும் அந்த அனைத்து தீர்மானங்களினதும் பெறுபேறுகளை நாட்டுக்கும் மக்களுக்கும் பெற்றுக்கொடுக்க அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன். குறித்த நோக்கத்துடனான வேலைத்திட்டங்கள் காணப்படுமாயின் எந்தவித சவால்களையும் வெற்றிகொள்ள நான் தயாராக உள்ளேன். என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சுற்றுலா துறையில் இனங்காணப்பட்ட பிரச்சினைகள் மற்றும் துறையின் மேம்பாட்டிற்காக மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள் குறித்து இதன்போது விரைவாக கலந்துரையாடப்பட்டது.

நாட்டுக்கு வருகைத்தரும் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகள் மேம்படுத்தப்படல் வேண்டும். விமான நிலைய வசதிகள் முதல் அனைத்து சேவைகளும் மேம்படுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்தினார்.

சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்க்கக்கூடிய இடங்களை மேம்படுத்துதல் மற்றும் அவற்றை பிரபல்யப்படுத்துவதற்கான விரிவான பரப்புரை நடவடிக்கைகளின் தேவைப்பாடு குறித்தும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

உள்நாட்டுஆயுர்வேதசிகிச்சை முறை சுற்றுலா பிரயாணிகளின் கவனத்தை பெரிதும் ஈர்த்துள்ளது. கடலலை விளையாட்டுக்கள், இலங்கை தேயிலை உள்ளிட்ட இலங்கைக்கு உரித்தான சிறப்பு தனித்துவமான சுற்றுலா பிரயாணிகளைக் கவரக்கூடிய துறைகளின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தினார்.

சுற்றுலாப் பயணிகளின் தேவைகள் இனங்காணப்பட்டு அதற்கமைய வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தோடு சுற்றுலா பிரயாணிகளை நாட்டுக்கு வரவழைப்பதற்கு முறையான பொறிமுறையொன்று தேவையாகும் என்பதை ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

இலங்கையின் பிரதிபிம்பத்தை உயர்த்துவதற்கும் இலங்கை சுற்றுலா செய்வதற்கு பொருத்தமான நாடாகும் என பிரபல்யப்படுத்துவதற்கும் வெளிநாட்டு தூதுவர்களின் ஊடாக வேலைத்திட்டங்களை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி சுற்றுலா சபையினருக்கு பணிப்புரை வழங்கினார்.

ஸ்ரீ லங்கன் உள்ளிட்ட விமான சேவைகள் சிறந்த தரத்துடன் மேம்படுத்தப்படல் வேண்டும். 04 நிறுவனங்களாக செயற்பட்டுவரும் சுற்றுலா சபை ஒன்றிணைந்து சகல நிறுவனங்களும் சிறந்த புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

நேரடி விமான சேவைகளை ஆரம்பிப்பதன் மூலம் இலங்கைக்கு வருகைத்தரும் சுற்றுலா பிரயாணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும். ஐரோப்பிய நாடுகளை இலக்கு வைத்து நேரடி விமான சேவைகளை ஆரம்பித்தல் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

சுற்றுலா மற்றும் ஹோட்டல் துறை தொடர்பான பட்டப்படிப்பினை தொடரும் மாணவர்களுக்கு ஹோட்டல் பாடசாலையில் பயிற்சியளித்து ஹோட்டல் முகாமையாளர்களாக உருவாக்குவதற்கான வாய்ப்புகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

சுற்றுலாபொலிஸ்சேவையை மீண்டும் ஆரம்பித்து அத்துறைக்கு மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

சுற்றுலா துறையில் துரித வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக சட்டதிட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் மற்றும் தேவையற்ற அனுமதி பெறும் நடவடிக்கைகள் அகற்றப்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ, சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் எஸ்.எம்.மொஹமட், சுற்றுலா மேம்பாடு பற்றிய இராஜாங்க அமைச்சின் செயலாளர் எஸ்.எஸ்.எஸ்.பெர்னாண்டோ உள்ளிட்டமூத்தஅதிகாரிகளும்துறை சார் நிறுவன தலைவர்களும் இக்கலந்துரையாடலில் பங்கு பற்றினர் – என்றுள்ளது. (ஐ)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்.ஜன. 14

கலாபூணம், தெய்வத்தமிழ்ச் சுடர், கலைக்குரிசில், சிவநெறிக்கலாநிதி, கலைமாமணி விஸ்வப்பிரம்மஸ்ரீ இராசையா ஸ்ரீதரனின் தொகுப்பில் வெளிவரும் தெய்வீகத் திருமுறைத் தேனமுதம்" (பஞ்ச புராணமும் பஜனைப் பாடல்களும்) நூலின் வெளியீடு நாளை புதன்கிழமை தைப்பொங்கல் தினத்தன்று காலை 11.00 மணியளவில் யாழ்ப்பாணம், கன்னாதிட்டி, காளி அம்மன் கோயில் நடைபெறும்

# ஆசிரியருக்குப் பிணை!

வவுனியா.ஜன. 14

மாணவி ஒருவருடன் தவறாக நடக்க முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஆசிரியர் எம்.எம். ரதன் வவுனியா நீதிமன்றத்தினால் நேற்றுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக செட்டிகுளம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டிற்கமைய கடந்த 8 ஆம் திகதி குறித்த ஆசிரியர் கைது செய்யப்பட்டு நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இந்த நிலையிலேயே நேற்றைய தினம் அவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# கல்வி வளர்ச்சியில் அனைவரும் பங்காளிகளாக இருக்கவேண்டும்

## வடக்கு கல்விச் செயலாளர் வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஜன. 14

கல்வி என்பது தனியே மாணவர்களை மையப்படுத்தியது அல்ல. இதில் அனைவருக்கும் பங்கு இருக்கின்றது என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சட்டத்தரணி எல்.இளங்கோவன்.

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்ற பொருளாதார வசதி குறைந்த மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டத்தின் ஊடாக 2018 க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், 2019 தரம் – 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வும், தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றலுக்கான உதவி வழங்கும் நிகழ்வும் கடந்த சனிக்கிழமை அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய திருமண மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் சு.சண்முகரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

அவ்விழாவுக்கு முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சட்டத்தரணி எல். இளங்கோவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு மாகாணம் கற்றவர்களாலும், கற்று உயர்ந்தவர்களாலும் ஒரு காலத்தில் மேலோங்கியிருந்தது. அத்தகைய காலங்களில் பெற்றோர்களின் ஊக்கமும், சமூகத்தின் அக்கறையும் மிகையாக இருந்தது. இன்று அத்தகைய நிலை மாறியிருக்கின்றது. பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் அக்கறையும், சமூகத்தின் அக்கறையும் குறைவாகவே உள்ளது.

சமூகம் எனும்போது ஒவ்வொரு கிராமத்திலும் தமது கிராமத்திற்கான கல்வி அறிவை வளப்படுத்தும் ஆர்வம் குறைந்துள்ளது. சமூகக்கட்டமைப்புகள் சீர்குலைந்துள்ளன. இவற்றுக்குள்ளே அகப்படுகின்ற குழந்தைகளும் சீர்குலைக்கப்படுகின்றார்கள் என்றே கருதப்படுகின்றது.

அரியாலை அபிவிருத்திச் சங்கம் வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வியில் இவ்வளவு அக்கறையாகஇருப்பதுபெருமையாக உள்ளது. இத்தகைய நிலை அனைத்துக் கிராமங்களிலும் உருவாகுமாக இருந்தால் நாம் பழைய நிலைக்கு மீண்டுவிடுவோம்.

ஆகையால் வடக்கு மாகாணத்தின் கல்வியை மேம்படுத்த நாம் அனைவரிடம் இருந்தும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம் – என்றார். (ஐ)

# இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஸ்தாரமாகும் என்றார் தென்னிலங்கையின் அரசியல் விடயங்களை நன்கு அவதானித்து வரும் ஓர் ஊடக நண்பர்.

பொதுத் தேர்தலுக்கு வேட்பு மனுத் தாக்கலாகும் போதுதான நீங்கள் எல்லோரும் ஆச்சரியப்படுவீர்கள் என்றார் அந்த நண்பர். ஏன் என்று கேட்டேன்.

*"ராஜபக்ஷ குடும்பம் எங்கெங்கெல்லாம் தேர்தலில் குதிக்கும் என்பதைத் தேடிப் பாருங்கள். மூக்கில் விரலை வைப்பீர்கள்!"* என்றார் அவர்.

அவரை மேலும் நோண்டினேன். ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் எந்தெந்த மாவட்டங்ளில் போட்டியிடுவார்கள் என்ற தகவலை – தாம் சேகரித்த செய்திகளின் அடிப்படையில் – வரிசைப்படுத்தினார்.

★ ***மஹிந்த ராஜபக்ஷ*** – முன்னர் ஹம்பாந்தோட்டையில் போட்டியிட்டவர். கடந்த தடவை குருநாகலில் களத்தில் குதித்தார். ஆனால் இம்முறை அவர் கம்பஹாவில் களமிறங்கத் திட்டமிட்டுள்ளார். மிக அதிகமான வாக்காளர்களைக் கொண்ட தேர்தல் மாவட்டம் இது. அங்கு போட்டியிடுவதன் மூலம் இலங்கையின் சரித்திரத்தில் மிக அதிகப்படியான விருப்பு வாக்குகளை எடுத்தவர் என்ற சாதனையை எட்டுவதற்காக இந்த மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்துள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செல்வாக்குக் கொடி கட்டிப் பறக்கும் மாவட்டமும் கூட.

★ ***சமல் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, நிரூபமா ராஜபக்ஷ*** – இந்த மூவரும் ராஜபக்ஷக்களின் வழமையான சொந்த மாவட்டமான ஹம்பாந்தோட்டையில் களமிறங்குகின்றனர். தேர்தல் வெற்றியின் பின்னர் சமலுக்கு சபாநாயகர் பதவியும், நாமலுக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் பதவியும், நிரூபமா ராஜபக்ஷவுக்கு வேறு ஓர் அமைச்சும் கிட்டும் என்று பேச்சடிபடுகின்றது. இவர்களில் நிரூபமா ராஜபக்ஷவின் கணவர் திருக்குமார் நடேசன் சுத்தத் தமிழர். சைவபக்தர். அராலியைச் சேர்ந்தவர். ராஜபக்ஷ குடும்பத்தில் உறவு வைத்த வடபகுதித் தமிழர்.

★ ***சஷீந்திர ராஜபக்ஷ*** – சமல் ராஜபக்ஷவின் மகன். மாகாண அரசியலில் கொடி கட்டிப் பறந்தவர். மொனறாகலை மாவட்டத்தில் கறமிறங்குவார்.

★ ***யோசித ராஜபக்ஷ*** – மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகன். கடற்படை அதிகாரி. ஆனால் இப்போதெல்லாம் கடற்படை அலுவலகங்களிலோ, தளத்திலோ, கடற்படைக் கப்பல்களிலோ அவரைக் காணமுடிவதில்லை என்று கேள்வி. நேரத்துடன் கடற்படையிலிருந்து விடுவித்து, தேர்தல் அரசியலுக்கு வழி ஏற்படுத்திக் கொடுக்க புதிய ஜனாதிபதியான அவரது சிறிய தந்தை தலையசைத்துவிட்டார் என்று கேள்வி. இவர் இரத்தினபுரி மாவட்டத்தில் வேட்பாளராக கறமிறங்கத திட்டமிட்டுள்ளார்.

★ ***ரோஹித ராஜபக்ஷ*** – மஹிந்த ராஜபக்ஷவின் மூன்றாவது – கடைக்குட்டி – மகன். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சித்தப்பா கோட்டாபய ராஜபக்ஷவின் சமூக வலைத்தள பிரசாரத்தின் முதுகெலும்பாக இருந்தவர். அவரைக் களுத்துறை மாவட்டத்தில் களமிறக்குவது குறித்துப் பேச்சடிபடுகின்றது.

★ ***பஸில் ராஜபக்ஷ*** – ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு நாட்டை விட்டுப் புறப்பட்டவர். கடந்த ஒன்றரை மாதங்களுக்கு மேல் நாட்டுக்கு வெளியிலே நிற்கின்றார். அதற்கான காரணங்கள் தொடர்பில் பல கதைகள் அடிபடுகின்றன. அமெரிக்கப் பிராஜாவுரிமை அவருக்கும் உண்டு என்கின்றார்கள். அதைத் துறக்கும் வேலையில் தான் இப்போது மும்முரமாக இருக்கின்றார், அதை முடித்துக்கொண்டு இம்மாத இறுதிக்கு முன் நாடு திரும்புவார், திரும்பியதும் தேர்தல் அரசியலில் ஈடுபடுவார் என்றெல்லாம் கூறப்படுகின்றது. அவரும் வந்தால் எந்த மாவட்டத்தில் போட்டியிடுவார் என்று தெரியவில்லை.

எது, எப்படி என்றாலும், இந்தப் பொதுத் தேர்தலோடு ராஜபக்ஷ வம்சம் தெற்கில் எல்லாத் திசைகளிலும் தனது குறுநில மன்னர்களையும் பிரதானிகளையும் நிலை நிறுத்திவிடும் என்றார் என்னுடைய அந்த ஊடக நண்பர்.

அதற்கிடையில் ஒரு கொசுறுச் செய்தியையும் தந்தார்.

மஹிந்தவின் மகன்மார் அண்மையில்தான் திருமணம் முடித்தார்கள். நாமல் ராஜபக்ஷவின் மாமனாருக்கும், றோஹிதவின் மாமனாருக்கும் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் அதிகார சபையின் இயக்குநர்கள் பதவி நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதுதான் அந்தத் தகவல். ராஜபக்ஷ குடும்பத்துக்குப் பெண் கொடுத்தமையால் கிடைத்த பெருமையன்றோ இது...!

–மின்னல்–

## ஜெனீவாக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டனின் தென்னாசியா மற்றும் ஆப்கானிஸ்தானுக்கான வெளிவிவகார, பொது நலவாய அலுவலகத்தின் இயக்குநரும், பிரிட்டிஷ் பிரதமரின் ஆப்கான், பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கான விசேட பிரதிநிதியுமான கரித் பெய்லி கொழும்பு வந்துள்ளார்.

நேற்று மதியம் கொழும்புக்கான பிரிட்டிஷ் தூதுவர் ஜேம்ஸ் எட்வேட் டௌரிஸ் அம்மையாரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சம்பந்தனையும், சுமந்திரனையும் கரித் பெய்லி சந்தித்தார். தூதுவர் டௌரிஸ் அம்மையாரும் இந்தச் சந்திப்பில் பங்குபற்றினார்.

எதிர்வரும் ஜெனீவா அமர்வில் இலங்கை தொடர்பான விடயத்தை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாக ஆராய்வதற்காகவே பிரிட்டிஷ் பிரதமரின் விசேட பிரதிநிதி கொழும்பு வந்திருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது.

ஜெனீவா அமர்வுகள் மூலம் சர்வதேச சமூகத்துக்கு இலங்கை தொடர்ந்து வழங்கிவந்த வாக்குறுதிகள், அவற்றை நிறைவு செய்யாமல் இழுத்தடித்து வந்தமை, இப்போது தனது கடப்பாட்டை முழுமையாகப் புறம் ஒதுக்குவதற்கு இலங்கை தீர்மானித்திருப்பது பற்றிய முழு விவரங்களையும் இந்த ஒரு மணி நேரச் சந்திப்பின் போது சுமந்திரனும் சம்பந்தனும் பிரிட்டிஷ் பிரதமரின் விசேட பிரதிநிதிக்கு விளக்கமாக விவரித்தனர் என அறியவந்தது.

சர்வதேசத்தின் ஏகமனதான தீர்மானத்தை - அதுவும் அடுத்தடுத்து ஐந்து வருடங்களாக மூன்று தீர்மானங்களை தானே முன்னின்று எடுக்க வைத்துவிட்டு - இப்படி அதை நிராகரிக்கும் ஒரு முடிவுக்கு இலங்கை வந்திருக்கின்றமை சர்வதேசத்தின் முகத்தில் விடப்பட்ட ஓர் அறை என்ற சாரப்பட கூட்டமைப்புப் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் பிரதிநிதிக்கு விளங்கப்படுத்தினர்.

சர்வதேச சமூகத்துடன் சேர்ந்து இந்த விடயத்தை எவ்வாறு கையாள்வது என்ற தந்திரோபாயம் குறித்தும் இரு பக்கத்தினரும் ஆராய்ந்தனர் எனவும் அறிய வந்தது.

ஜெனீவா விவகாரத்தில் தமிழர் தரப்புக்கு மிகுந்த நம்பிக்கையையும் திருப்தியையும் தரும் திருப்பத்தை நேற்றைய சந்திப்பு ஏற்படுத்தியிருப்பதாகவும் அறியவந்தது.

ஜெனீவா தீர்மானத்தைத் தூக்கிக் கடாசுவதற்கு கொழும்பு அரசு முயன்றால் அதற்கு எதிராக சர்வதேச சமூகம் திரளுவதற்கான சாத்தியங்கள் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## 50 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயது வரையறை கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட வாக்குறுதிக்கு அமைவாக இவ்வாறு 50 ஆயிரம் பட்டதாரிகள் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவர் என்றும் கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். (ஐ)

## 46 நாள்களுக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றிலிருந்து சரியாக 46 ஆவது நாளன்று நள்ளிரவு 12 மணிக்கு நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. இதனைத் தொடர்ந்து நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் பொதுத் தேர்தல் நேற்றிலிருந்து 100 நாள்களுக்குப் பின்னர் நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (ஐ)

## அபிவிருத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இந்த ஆபத்துக்களை உணர்ந்து கொண்டு இதனைத் தடுப்பதற்கு உறுதியான - நேர்மையான - தங்கள் தலைமைத்துவத்தை வரும் தேர்தல்களில் மக்கள் தேர்ந்தெடுக்கவேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

புதிய அரசின் செயற்பாடுகள் தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கைத்தீவு என்பது முற்று முழுதாக சிங்கள, பௌத்த நாடு என்பதுதான் புதிய அரசின் கொள்கையாக இருக்கிறது. அந்தக் கொள்கையை அவர்கள் மிகத் தெளிவாகவும் அதே நேரம் வெளிப்படையாகவும் சொல்லியும் இருக்கின்றனர். அவர்களுடைய எதிர்காலச் செயற்பாடுகள் ஊடாகவும் தெளிவாகக் காட்ட இருக்கின்றனர்.

ஜனாதிபதி கோட்டாபய நாடாளுமன்றத்தில் ஆற்றிய முதலாவது கன்னிப் பேச்சில் தனது தேர்தல் வெற்றிக்கு சிங்கள, பௌத்தர்கள் மட்டும்தான் காரணம் என்று சொல்லி பெருமைப்பட்டமையும் கூட அதன் தொடர்ச்சிதான். அவர்களது அந்தக் கொள்கையின் மிக முக்கியமான ஓர் அங்கமாகத்தான் அதனையும் பார்க்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு எனும் விடயத்தில் எதனைப் பற்றியும் அவர் சொல்லவில்லை. அதே நேரத்தில் அபிவிருத்தி என்ற விடயத்தில் பலவற்றைச் செய்வார் எனச் சொல்லியுள்ளார். அதில் மாற்றுக் கருத்து இல்லை. இங்கு அவர் அபிவிருத்தியைச் செய்யத்தான் போகின்றார். ஆனால் அந்த அபிவிருத்தியை எந்தக் கோணத்தில் செய்யப் போகின்றார் என்பதே மிக முக்கியமானது.

அதாவது கடந்த பல வருடங்களாக போரால் பாதிக்கப்பட்ட பிரதேசமாக எங்களது பிரதேசங்கள் இருக்கின்றன. அதே நேரத்தில் எங்களுடன் ஒப்பிடுகையில் சிங்கள மக்கள் பொருளாதார ரீதியாக முன்னிலையில்தான் உள்ளனர். இவ்வாறான நிலையில்தான் அவர்களுடைய அபிவிருத்திகளும் பொருளாதார முன்னேற்றச் செயற்பாடுகளும் நடக்கப் போகின்றன.

அப்படிப்பட்ட இடத்தில் அபிவிருத்தி என்ற போர்வையில் தென்னிலங்கையில் இருக்கக் கூடிய சிங்கள மக்கள் இங்கு தமிழ் மக்களோடு போட்டி போடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி தமிழ் மக்கள் அந்தப் போட்டியில் நின்று பிடிக்க முடியாத ஒரு நிலைமையை உருவாக்கிச் சிங்கள மக்களின் கைகளுக்கு வடக்கு - கிழக்கின் பொருளாதாரத்தைக் கொண்டு போவதுதான் அவர்களுடைய மிகத் தெளிவான நோக்கம்.

இதற்கு எதிராக நேர்மையான, உறுதியான தலைமைத்தும் அவசியம். அதாவது இந்தப் பொருளாதார அபிவிருத்தி என்ற போர்வையில் வரப்போகின்ற சிங்கள மயமாக்கலை எதிர்த்து நிற்கக்கூடிய பலம் பொருந்த தமிழ் மக்களுடைய பொருளாதாரப் பலத்தையும் சரியாகப் பயன்படுத்தி ஒரு மாற்று வேலைத் திட்டம் ஊடாக தமிழர் தாயகத்தை - தமிழ் மக்களுடைய பொருளாதாரத்தைப் பலப்படுத்தி அதை தொடர்ந்தும் எங்கள் மக்களோடு வைத்திருக்கக்கூடிய ஒரு வேலைத் திட்டத்தை வகுக்கக் கூடிய ஒரு தரப்பை எதிர்வரும் தேர்தலில் தேர்ந்தெடுக்கவேண்டும்.

ஆகவே இந்த ஆபத்துக்களை உணர்ந்து அல்லது விளங்கிக் கொண்டு வரப்போகின்ற காலப்பகுதியில் எங்கள் மக்கள் புதிய தலைமைத்துவத்தை அதுவும் ஒரு நேர்மையான - கொள்கையில் தெளிவான - உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டு எதிர்காலம் சம்பந்தமாக தெளிவான ஒரு வியூகத்தை வகுக்கக் கூடிய - ஓர் இளம் தலைமைத்துவமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கையாக இருக்கிறது - என்றார். (ஐ-07)

## மைதானத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகா வித்தியாலய மாணவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மடு கல்வி வலயத்துக்குட்பட்ட கருங்கண்டல் மகா வித்தியாலய மாணவர்கள் நேற்றுக் காலை 7.30 மணியளவில் பாடசாலையின் விளையாட்டு மைதானத்துக்கு முன் ஒன்று கூடி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் பழைய மாணவர்கள், பெற்றோர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

சுமார் 60 வருடங்களுக்கு மேலாகப் பாடசாலைக்கான விளையாட்டு மைதானமாக இருந்த காணி, மாந்தை மேற்கு பிரதேச செயலகம் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகியவற்றின் அனுமதியுடன் விளையாட்டுக்கழகம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு அங்கு கட்டடம் அமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தற்போது வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியும் இந்த மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த நிலையில் அந்த மைதானத்தில் கட்டம் கட்டும் நடவடிக்கை இடம் பெற உள்ளது. இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் மைதானத்தை பாதுகாக்கக் கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதன் போது மடு வலயக்கல்விப் பணிப்பாளர் சம்பவ இடத்திற்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது மாணவர்கள் மற்றும் பெற்றோர் தனித்தனியாக தமது கோரிக்கை அடங்கிய மனுவை வலயக்கல்விப் பணிப்பாளரிடம் கையளித்தனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாகத் துரித நடவடிக்கைகளை தான் மேற்கொள்ளுவார் என அவர் மாணவர்களுக்கு உறுதியளித்தார். (ஐ)

## பிரதமரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல லால் பண்டாரிகொட இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுநிறைவேற்று அதிகாரத்தை முழுமையாக பெற்றுக்கொள்ளும் நோக்கத்திலான செயற்பாடுகளே தற்போது இடம்பெறுகின்றன.

இதனால் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் அதிகார மோதல் ஏற்பட்டுள்ளது. ஆனால் இதனை, அவர்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினையாகக் காண்பிக்க முயற்சிக்கின்றனர்.

19 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நீக்குவதன் மூலம் பிரதமருக்குக் காணப்படும் அதிகாரங்களையும் தன்னகப்படுத்திக் கொண்டு முழுமையான நிறைவேற்றதிகார ஜனாதிபதியாவதற்கு கோட்டாபய முயற்சிக்கின்றார்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற முயற்சிப்பதற்கான நோக்கமும் இதுவேயாகும் - என்றார். (ஐ)

## அரசு மோசமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை மீதான ஐ.நா. தீர்மானத்தை அடியோடு நிராகரிக்க வேண்டும் எனவும், அந்தத் தீர்மானத்தைக் குப்பையில் தூக்கி வீசவேண்டும் எனவும் கோட்டாபய தரப்பினர் கூறியுள்ளமை முட்டாள்தனமான கருத்தாகும்.

ஜெனீவாவில் இலங்கை மீதான தீர்மானம் இறுதியில் இலங்கையின் இணை அனுசரணையுடன் ஏனைய அனைத்து உறுப்புரிமை நாடுகளின் ஆதரவுடன்தான் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை அரச தரப்பினர் கவனத்தில் கொள்ள வேண்டும். அந்தத் தீர்மானத்துக்கு மதிப்பளித்து அரசு இதனை நடைமுறைப்படுத்தியே ஆக வேண்டும்.

அதேவேளை, கோட்டாபய அரசு வாய்க்கு வந்த மாதிரி கருத்துக்களை வெளியிட்டு சர்வதேச சமூகத்துடன் முட்டி மோதுவதால் ஜெனீவாவில் இம்முறை எதிர் விளைவுகளைச் சந்திக்க வேண்டியும் வரும் - என்றார். (ஐ)

## 200 தேள்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமானம் ஊடாக சீனா பயணிக்கவிருந்த சீனக் குடிமகன் நேற்றுப் பிற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரின் பயணப்பொதியிலிருந்து அவை மீட்கப்பட்டுள்ளன.

உணவுத் தேவைக்காக விற்பனை செய்யும் நோக்குடன் அவற்றை அவர் சீனாவுக்குக் கடத்திச் செல்ல முற்பட்டார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது என்றும் பொலிஸார் கூறினர். (ஐ)

## கிழக்கு பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டு வருகின்றது என மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மட்டக்களப்பு மருத்துவபீடத்தில் முதலாம் ஆண்டில் கற்று வரும் தலவாக்கலையைச் சேர்ந்த சின்னதம்பி மோகன்ராஜ் என்னும் மாணவன், கடந்த வெள்ளிக்கிழமை முதல் காணாமல்போயுள்ளாரென மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

பிள்ளையாரடியில் உள்ள வளாக விடுதியில் இருந்து சென்றவர், விடுதிக்குத் திரும்பாத நிலையில், சக மாணவர்களால், மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், இது தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், இறுதியாக அவரது அலைபேசி இணைப்பு கல்லடிப் பாலத்துக்கு அருகில் செயற்பட்டுள்ளமையால், கல்லடிப் பாலம் அருகிலும் கடற்படையினரும் பொலிஸாரும் தேடுதல்களை மேற்கொண்டுள்ளனர்.

இந்த மாணவன், கோல்புறுக் தமிழ் வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தரத்தைக் கற்று, தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தர விஞ்ஞானப் பிரிவில் மிகச் சிறந்த பெறுபேற்றைப் பெற்று, மருத்துவ பீடத்தில் இணைந்துள்ளார்.

இதேவேளை, காணாமல் போன மாணவனின் பெற்றோர், கோல்புறுக் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். மாணவன் தொடர்பான தகவல் தெரிந்தால் அக்கரப்பத்தனை, மட்டக்களப்பு பொலிஸ் நிலையங்களுக்கும் 0775013587 என்ற அலைபேசி இலக்கத்தினூடாக மாணவனின் தந்தைக்கும் அறியத் தருமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர். (ஐ)

## சபாநாயகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைப் பதவியை ஏற்க கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் வலியுறுத்தி வரும் நிலையில் இந்தச் செய்தி வெளியாகியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையை ஏற்பதா அல்லது உட்கட்சிப் பிரச்சினை காரணமாக அரசியலில் இருந்து நிரந்தரமாக ஒதுங்குவதா என்று அவரின் அரசியல் முடிவு என்பது குறித்து உடனடியாகத் தெரியவரவில்லை. (ஐ)

## தேசிய பொங்கல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டுள்ளது.

அதற்கமைய தேவையற்ற செலவுகளை குறைத்து மூன்று மாவட்டங்களில் உள்ள தமிழ் இளைஞர், யுவதிகளை உள்ளடக்கி பொங்கல் நிகழ்வை நடத்த உத்தேசித்துள்ளதாக ராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

தேசிய பொங்கல் விழா குறித்து நேற்றுக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தேசிய நல்லிணக்கத்தை மேம்படுத்துவதாகக் குறிப்பிட்டு கடந்த அரசு மூன்று இனத்தவர்களின் பிரதான பண்டிகைகளுக்கு 25 மாவட்டங்களிலும் உள்ள இளைஞர், யுவதிகளை ஒன்றிணைத்து தேசிய நிகழ்வாகப் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடப்பட்டது.

இதனால் எவ்வித பயனும் மாற்றங்களும் ஏற்படவில்லை. மாறாக வீண் செலவுகள் மாத்திரமே மிஞ்சின.

உலகவாழ் தமிழர்கள் நாளை தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடவுள்ளனர். இந்நிலையில் 25 மாவட்ட இளைஞர், யுவதிகளை ஒன்றிணைத்துத் தைப்பொங்கலைக் கொண்டாடத் தீர்மானிக்கவில்லை.

இதனால் பாரிய செலவுகள் ஏற்படுகின்றன. வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் உள்ள இளைஞர்களை ஒன்றுபடுத்தி பொங்கல் தின நிகழ்வைக் கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்விற்குச் செலவாகும் நிதியினை ஒவ்வொரு இளைஞர் கழக அபிவிருத்திக்கும் செலவு படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இனிமேல் இடம்பெறும் அனைத்துப் பண்டிகைகளிலும் இம்முறையினைக் கையாளவுள்ளோம் - என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## வல்லாதிக்க நாடுகளின் பேசுபொருள்

ஜனாதிபதித் தேர்தல் முடிந்து விட்டது. அடுத்துப் பொதுத் தேர்தல்.

அதற்கிடையில் ஜெனீவா விவகாரம் சூடு பிடிக்கும் வாய்ப்புக்கள் தென்படுகின்றன.

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 40 ஆவது அமர்வு பெப்ரவரி 25 ஆம் திகதி தொடங்குகின்றது. மார்ச் 22 ஆம் திகதி முடிவடைகின்றது. அதில் மார்ச் 20 ஆம் திகதிதான் இலங்கை விவகாரம் பரிசீலனைக்கும் விவாதத்துக்கும் வருகின்றது.

பெரும்பாலும் மார்ச் மாதம் முதலாம் வாரத்தில் தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் – அந்த நாடாளுமன்றத்தின் தற்போதைய பதவிக் காலம் நான்கரை ஆண்டுகள் கழியும் அச்சமயத்தில் – ஜனாதிபதிக்கு வந்து விடும். அச்சமயத்தில் அவர் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆக, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில், ஜெனீவாவில் தற்போதைய 40 ஆவது அமர்வில் இலங்கை விவகாரத்தைக் கையில் எடுக்கும் போது இங்கு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கையேற்கப்படும் சூழல் நிலவும்.

நடக்கப் போகின்ற பொதுத் தேர்தல் சூடு கிளப்பும் என்றால், அந்தப் பிரசாரத்தில் பட்டையைக் கிளப்பும் விடயமாக ஜெனீவா விவகாரம் அமையும் என்பது திண்ணம்.

ஜெனீவா விவகாரத்தில் அரசு மசியாது, ஜெனீவா விடயத்தைக் காட்டி அரசை மிரட்ட முடியாது, அதற்கு நாம் அஞ்சோம் – என்றெல்லாம் ராஜபக்ஷக்களின் அரசினுடைய பிரசாரப் பீரங்கிகளான விமல் வீரவன்ஸ, சுசில் பிரேம ஜயந்த போன்றோர் வெளியில் முழங்கினாலும் விவகாரம் இலங்கை அரசின் குரல்வளையைப் பிடித்து உலுக்கப் போவது என்னவோ தவிர்க்க முடியாத விடயமாகவே தோன்றுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தானும் சேர்ந்து அனுசரணைப் பணி வகித்து, முன்னின்று செயற்பட்டு, இலங்கை தொடர்பான பிரேரணையைத் தானும் சேர்ந்து பிரேரித்து நிறைவேற்றிய பின்னர் –

அதுவும் ஒரு தடவை நிறைவேற்றிய தீர்மானத்தின் வாசகங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் கால அவகாசம் வழங்கும் பிரேரணைகளையும் ஒன்றுக்கு, இரண்டு தடவைகள் தானும் அன்சரணைப் பணி வகித்து, பிரேரித்து நிறைவேற்றி விட்டு –

சுமார் ஐந்து வருட காலம் உலக நாடுகளுடன் சேர்ந்து மொத்தம் மூன்று தீர்மானங்களை ஏகமனதாக எடுக்கச் செய்து, நிறைவேற்றி, காலத்தை இழுத்தடித்து விட்டு –

இப்போது அந்தத் தீர்மானங்களை ஏற்க மாட்டோம், அவற்றை நிராகரிக்கின்றோம், அந்தத் தீர்மானம் மூலம் இலங்கை ஒப்புக் கொண்ட பொறுப்புகளை நிறைவேற்ற மாட்டோம் என்று இலங்கை அரசு தன்பாட்டில் ஒரு தலைப்பட்சமாக அறிவிப்பது சர்வதேசக் கடப்பாட்டை நிறைவு செய்யாமல் புறம் ஒதுக்கும் அபத்தச் செயலாகவே – அத்துமீறல் போக்காகவே – சர்வதேச சமூகத்தினால் நோக்கப்படும் என்பது திண்ணம்.

சீனாவின் வெளிவிவகார அமைச்சர் கொழும்பு வந்து திரும்புகிறார். அமெரிக்காவின் உயர் மட்டப் பிரதிநிதி கொழும்பில் நிற்கின்றார். ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சரும் இலங்கை அரசின் அழைப்பை ஏற்றுக் கொழும்புக்கு வந்துள்ளார்.

இவர்கள் எல்லோரும் நிச்சயமாக மார்ச் மாதத்தில் இலங்கைக்குக் கழுத்துப் பிடியாக வரவிருக்கும் ஜெனீவா விவகாரம் குறித்துக் கொழும்பில் இலங்கை அரசுப் பிரதிநிதிகளுடன் மூடிய அறைக்குள் நேரடிப்பேச்சு நடத்துவார்கள் என்பது நிச்சயம். அந்த நாட்டுப் பிரதிநிதிகள் பேசாவிட்டாலும் தற்போதைய கொழும்புப் பேச்சுகளின் நிகழ்ச்சி நிரலில் ஜெனீவா விடயத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டிய தேவை கொழும்பு அரசுக்கு உண்டு. ஆகவே இந்த விவகாரம் தற்போது வெளியில் தெரியாமல் பேசுபொருளாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

இதேசமயம், பிரிட்டனின் தென்னாசியா மற்றும் ஆப்கானிஸ்தானுக்கான வெளிவிவகார, பொதுநலவாய அலுவலகத்தின் இயக்குநரும், பிரிட்டிஷ் பிரதமரின் ஆப்கான், பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கான விசேட பிரதிநிதியுமான கரித் பெய்லி கொழும்பு வந்துள்ளார். அவர் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரோடு ஜெனீவாத் தீர்மான நடைமுறையாக்கம் குறித்து அரசியல் ரீதியான பேச்சுகளில் ஈடுபட்டிருக்கின்றார்.

இத் தீர்மானங்கள் தொடர்பில் தமிழ்த் தரப்பின் நிலைப்பாடு, எதிர்பார்ப்பு, திட்டங்கள் குறித்து அவர் விரிவாக – விளக்கமாக – கேட்டறித்தார் எனத் தெரிகின்றது.

உலகின் ஐந்து வல்லாதிக்க நாடுகளில் பிரான்ஸ் தவிர்ந்த மற்றைய நான்கு நாடுகளின் பிரதிநிதிகள் ஒரே சமயத்தில் கொழும்பில் பிரசன்னமாகியிருக்கும் போது ஜெனீவா விடயம் பேசப்படுவது அந்த விவகாரத்தின் முக்கியத்துவத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

## பருத்தித்துறை கடை எரிப்பு;
# சந்தேகநபர் ரயில் முன் பாய்ந்து உயிர் மாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 14

பருத்தித்துறை நகரில் பான்சி கடை எரிப்புச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனத் தேடப்பட்ட சந்தேகநபர் தனக்கு தானே தீ மூட்டியவாறு ரயில் முன்பாக பாய்ந்து தனது உயிரை மாய்த்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

பருத்தித்துறை பன்னங்கட்டி பகுதியை சேர்ந்த ராஜசேகரம் ராஜசீலன் (வயது – 32) என்பவரே இவ்வாறு தனது உயிரை மாய்த்துள்ளார்.

பருத்தித்துறை சந்தைக் கட்டடத் தொகுதியில் பான்சி கடையுடன் இணைந்த புடைவைக் கடை ஒன்று நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தீ மூட்டி எரிக்கப்பட்டது. அதனால் கடையில் இருந்த சுமார் 50 இலட்சம் ரூபா பெறுமதியான உடுபுடைவைகள் மற்றும் பான்சி பொருள்கள் என்பன எரிந்து நாசமாகின.



இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பருத்தித்துறைப் பொலிஸார் , அருகில் இருந்த கடையின் சி.சி.ரி.வி கமரா பதிவுகளின் அடிப்படையில் எரிக்கப்பட்ட கடைக்கு அருகில் உள்ள மற்றொரு கடை உரிமையாளரே தீ மூட்டி தப்பிச் செல்வதை ஆரம்ப கட்ட விசாரணைகளில் கண்டறிந்துள்ளனர்.

அதன் அடிப்படையில் சந்தேகநபரைக் கைது செய்யும் நோக்குடன் நேற்று முன்தினம் அவரது வீட்டுக்குச் சென்றபோது, அவர் தலைமறைவாகி இருந்தார்.

இந்த நிலையில் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் தீவிரப்படுத்தி இருந்தனர்.

சந்தேக நபர் நேற்றுத் திங்கட்கிழமை காலை. 6.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயில் முன்பாக தனக்கு தானே தீ மூட்டியவாறு பாய்ந்து உயிரை மாய்த்துள்ளார். சம்பவம் தொடர்பில் கொடிகாம பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(ஐ–07)

# மகளைத் துஷ்பிரயோகம் செய்த தந்தை கைதானார்

திருமலை, ஜன. 14

திருகோணமலை- கந்தளாய் பகுதியில் 11 வயதுடைய தனது மகளைப் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திய குற்றச்சாட்டில் கைதான தந்தையை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற பதில் நீதிவான் நேற்று முன் தினம் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 11ஆம் திகதி இரவு சந்தேகநபர் மதுபோதையில் வீட்டுக்கு வந்து மனைவியுடன் சண்டையிட்டுள்ளார். இதன் பின்னர் மனைவி முன் வீட்டுக்குச் சென்று உறங்கியுள்ளார். இதன்போது மகளைத் தந்தை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் எனக் கந்தளாய் தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்தே சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி தற்போது கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# மாவனெல்லை புத்தர் சிலை உடைப்பு விசாரணையில் அசாத் சாலி தலையீடு

## பொலிஸ் அதிகாரி வாக்குமூலம்

கொழும்பு, ஜன. 14

சர்ச்சைக்குரிய மாவனெல்லை புத்தர் சிலை உடைப்பு தொடர்பான பொலிஸ் விசாரணையில், முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி தலையீடு செய்த விடயம் அம்பலமாகியுள்ளது.

ஓய்வுபெற்ற பொலிஸ் உயரதிகாரியொருவர், சி.ஐ.டியிடம் வழங்கிய வாக்குமூலத்தில் இந்த விடயம் வெளிப்பட்டுள்ளது.

மாவனெல்லை புத்தர் சிலை உடைப்பு விசாரணையில் அசாத் சாலி தலையீடு செய்தார் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணையை ஆரம்பித்துள்ள சி.ஐ.டியினர், முன்னாள் கேகாலை மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி பாலித சிறிவர்த்தனவிடம் கடந்த சனிக்கிழமை வாக்குமூலம் பதிவு செய்தார். அவரது இல்லத்தில் நான்கு மணி நேரம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில், இந்தியப் புலனாய்வு அமைப்புக்கள் ஏப்ரல் 8ஆம் திகதியே அனுப்பிய எச்சரிக்கையை, அப்போதைய பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர முறையாக பகிர்ந்தாரா என்பது குறித்தும், சி.ஐ.டி. விசாரணை மேற்கொண்டது.

2018 டிசம்பரில் மாவனெல்லையில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் பற்றிய விசாரணையை நீண்ட காலமாக கேகாலை மாவட்டத்தின் பொறுப்பாளராக இருந்த சிறிவர்தன மேற்கொண்டிருந்தார். இந்த குழு ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடையவர்களுடன் கொண்டிருந்த உறவு குறித்தும் சி.ஐ.டி. வாக்குமூலம் பெற்றிருந்தது.

புத்தர் சிலை உடைப்பு தொடர்பான சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான பொலிஸ் விசாரணை குறித்து, சந்தேகநபர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து அப்போதைய மேல் மாகாண ஆளுநர் அசாத்சாலிவிசாரித்தார்எனஅவர்தெரிவித்துள்ளார்.

## நாளை 15.01.2020 - புதன்கிழமை

நட்சத்திரம்: பூரம் மு.ப. 09.42 வரை
திதி : பஞ்சமி பி.ப. 04.03 வரை

இராகுகாலம் : 12.34 – 02.04
சுப நேரம் : 05.04 – 06.34

## பொலிஸ் உத்தியோகத்தர் டெங்கினால் உயிரிழப்பு

மன்னார், ஜன. 14

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

மன்னார் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய மதவாச்சி பிரதேசத்தைச் சேந்த மூன்று பிள்ளைகளுக்கு தந்தையான பி.சீ.பியரத்தின (வயது – 45) என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

காய்ச்சல் எனத் தெரிவித்து கடந்த 10ஆம் திகதி மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே நேற்று முன்தினம் மாலை அவர் உயிரிழந்தார்.

மரண விசாரணையை அடுத்து சடலம் உறவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேலும் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் காய்ச்சல் என மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனரா என்பது தொடர்பில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## கங்காரு சின்னத்தில் களமிறங்கும் சஜித்?



### இலங்கைத் தொழிலாளர் கட்சி தலைவர் லியனகே கூறுகிறார்

கொழும்பு, ஜன. 14

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் எமக்கும் இடையிலான பேச்சு வெற்றியளிக்குமாயின் பொதுத்தேர்தலில் கங்காரு சின்னத்தில் அவர் போட்டியிடுவாரென இலங்கைத் தொழிலாளர் கட்சியின் தலைவர் ஏ.எஸ்.பி.லியனகே தெரிவித்துள்ளார்.

நாட்டில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

சஜித் பிரேமதாஸ எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்காக தனி முன்னணியில் தனது கட்சியுடன் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கின்றோம்.

சஜித் போன்ற ஒரு மூத்த அரசியல்வாதி தனது கட்சியில் இருந்து போட்டியிடுவது எமக்கு கிடைத்த அதிர்ஷ்டமாகும்.

அத்துடன் தற்போதுள்ள கட்சிகளில் ஊழல் குற்றச்சாட்டுகள் இல்லாதஒரேஅரசியல்கட்சியென்றால் அது எமது கட்சியாகும்.

எனவே பேச்சுகள் வெற்றிகரமாக நிறைவடைந்தால் அடுத்த தேர்தலில்கங்காருஅடையாளத்துடன் சஜித் பிரேமதாஸ போட்டியிடுவார் – என்றார். (ஐ)

## அம்புலன்ஸில் பிரசவம்!

மட்டக்களப்பு, ஜன. 14

மட்டக்களப்பு – வவுணதீவில் கடந்த சனி இரவு கர்ப்பிணிப் பெண் ஒருவர் அம்புலன்ஸ் வண்டியிலேயே குழந்தையை பிரசவித்துள்ளார்.

கரடியனாறுப் பிரதேசத்திலுள்ள தும்பாலை எனும் கிராமத்திலிருந்து தாய் ஒருவருக்கு பிரசவ வலி ஏற்பட்ட போது அவர்கள் 1990 இலவச அம்புலன்ஸ் சேவைக்கு தொடர்பு கொண்டனர். அப்போது கரடியனாறு பிரிவிலுள்ள அம்புலன்ஸ் வண்டி வேறு சேவையில் ஈடுபட்டதால் வவுணதீவு நிலையத்தின் அம்புலன்ஸ் வண்டி விரைந்து சென்று அந்தப் பெண்ணை ஏற்றிக்கொண்டு சுமார் 50 மீற்றர் தூரம் செல்கையில் பிரசவ வலி எடுத்து, பெண் குழந்தை பிறந்துள்ளது.

தன்னையும் தனது பெண் குழந்தையையும் சுகமான முறையில் எதுவித ஆபத்துமில்லாமல் பிரசவம் பார்த்த வவுணதீவு நிலையத்தின் 1990 சுவசெரிய இலவச அம்புலன்ஸ் சேவையின் உத்தியோகத்தர்களுக்கு அந்தத் தாயார் நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

தற்போது அந்தத் தாயும் குழந்தையும் கரடியனாறு வைத்தியசாலையில் ஆரோக்கியமாக உள்ளனர். (ஐ)

## என்னைத் துரோகி என்று பிரபாகரன் கூறவில்லை



### சொல்கிறார் கருணா

அம்ப்பாறை, ஜன. 14

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாரன் தன்னை ஒருபோதும் துரோகி என கூறவில்லையென முன்னாள் பிரதியமைச்சர் கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

அம்பாறையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

என்னைத் துரோகி என்று இறுதிவரை தலைவர் கூறவில்லை. கூறியிருந்தால் அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டிருப்பேன்.

எனக்கும் தலைவருக்குமே தெரியும் என்ன பிரச்சினை என்று. இன்று பலர் அரசியற்கட்சித் தலைவர்களைத் தேசியத் தலைவர் என்று விழிக்கின்றனர். தேசியத் தலைவர் என்றால் தலைவர் பிரபாகரன் மாத்திரமே. அது ஒரு வரலாற்று அத்தியாயம். அதை மீண்டும் உருவாக்க முடியாது. அங்கு இருந்துதான் நான் வந்தேன். இல்லையெனில் கருணாவை உங்களுக்குத் தெரிந்திருக்க முடியாது – என்றார். (ஐ)

## மூன்று ராஜாங்க அமைச்சர்களின் விடயதானங்கள் வர்த்தமானியில்

கொழும்பு, ஜன. 14

மூன்று இராஜாங்க அமைச்சர்களின் விடயதானங்கள் தொடர்பாக வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனக பண்டார தென்னக்கோன், கெஹெலிய ரம்புக்வெல மற்றும் பிரசன்ன ரணதுங்க ஆகிய இராஜாங்க அமைச்சர்களின் விடயதானங்கள் குறித்து அறிவிக்கும் வர்த்தமானி அறிவித்தலே இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளது.

அமைச்சரவை அமைச்சர்கள் நியமிக்கப்பட்ட பின்னர் இராஜாங்க அமைச்சர்களுக்குரிய நிறுவனங்கள் மற்றும் பொறுப்புகள் குறித்து அமைச்சரவை அமைச்சர்கள் அறிவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ஆலோசனை வழங்கியிருந்தார்.

அதற்கமைய ஓய்வூதியத் திணைக்களம், அரச மொழிகள் திணைக்களம், அரச மொழிகள் ஆணைக்குழு, மொழி, கல்வி மற்றும் பயிற்சிகள் தொடர்பான தேசிய நிறுவனம், மனித வள அபிவிருத்தி தேசிய சபை, அரச சேவை ஓய்வூதியதாரர்கள் அறக்கட்டளை நிதி ஆகிய விடயதானங்கள் அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மஹிந்த சமரசிங்கவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

அதேபோன்று இலங்கை நிர்வாக சபை, நில அளவை நிறுவனம், அரச முகாமைத்துவம் மற்றும் நிதி நடவடிக்கைகள் ஆகிய விடயதானங்கள் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ணவின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. (ஐ)

## பசறையில் மக்கள் போராட்டம்



கொழும்பு, ஜன. 14

பசறை – மடுல்சீமை பகுதிக்கு புதிய பஸ்ஸை சேவையில் ஈடுபடுத்தாமைக்கு எதிர்ப்பு வெளியிட்டு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுத் திங்கட்கிழமை காலை 9.45 மணி முதல் மேற்கொள்ளப்பட்டது.

பசறையிலிருந்து எகிரிய நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் 12 பேர் உயிரிழந்திருந்ததுடன், 40 பேர் காயமடைந்தனர்.

இந்நிலையில், அந்த பயணிகள் பஸ்ஸுக்குப் பதிலாக பிறிதொரு பஸ் இதுவரை சேவையில் ஈடுபடுத்தப் படவில்லை என ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டினர்.

எனவே அதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதனால் மடுல்சீமை, எகிரிய மற்றும் ரோபேரி ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)


SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# பெண் வெடிகுண்டு மிரட்டல்; வழியில் திரும்பியது விமானம்

கொல்கத்தாவில் இருந்து மும்பை சென்ற ஏர்ஏசியா விமானத்தில் பயணித்த இளம் பெண் ஒருவர் நடு வானில் வெடிகுண்டு மிரட்டல் விடுத்தமையால் பதற்றம் ஏற்பட்டது.

மோகினி மண்டல் என்ற பயணி, பணிப்பெண் மூலம் விமானிக்குக் கொடுத்தனுப்பிய குறிப்பில் தான் உடலில் வெடிகுண்டுகளைக் கட்டியிருக்கிறார் எனவும், விமானத்தை வெடிக்கச் செய்யப்போகிறார் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.



இதையடுத்து விமானி விமானத்தைக் கொல்கத்தாவுக்குத் திருப்பி விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறக்கினார். பாதுகாப்புப் படையினர் விமானத்துக்குள் சென்று அந்தப் பெண்ணை வளைத்துப் பிடித்த போது அவரது உடலில் வெடிகுண்டு எதுவும் இல்லை எனத் தெரிய வந்தது.

விசாரணையில், அந்தப் பெண் தனது தந்தையின் செய்தி நிறுவனத்தில் பணிபுரிபவர் எனத் தெரிவித்த நிலையில், அந்தப் பெண் மனநிலை பாதிக்கப்பட்டவரா என்பது உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# இந்தியாவில் நாள் தோறும் 109 குழந்தைகள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகுகின்றன!

## வெளியானது அதிர்ச்சி தரும் புள்ளிவிவர அறிக்கை

புதுடெல்லி,ஜன.14

இந்தியாவில் 2018 ஆம் ஆண்டில், நாள் ஒன்றுக்கு 109 குழந்தைகள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகின என அதிர்ச்சிகரமான புள்ளிவிவரம் வெளியாகி உள்ளது.

தேசிய குற்ற ஆவண காப்பகம் சமீபத்தில் ஒரு புள்ளிவிவரத்தை வெளியிட்டது. அதில், கடந்த 2018 ஆம் ஆண்டில் இந்தியாவில் நாள் ஒன்றுக்கு 109 குழந்தைகள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகின எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது, முந்தைய ஆண்டை விட 22 சதவீதம் அதிகமாகும்.

அதாவது, 2017 ஆம் ஆண்டில், 'போக்சோ' சட்டத்தின்கீழ், 32 ஆயிரத்து 608 குழந்தை பாலியல் துன்புறுத்தல் சம்பவங்கள் முறைப்பாடு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 39 ஆயிரத்து 827 ஆக உயர்ந்தது.

2018 ஆம் ஆண்டில், 21 ஆயிரத்து 605 குழந்தை பாலியல் வன்முறைச் சம்பவங்கள் புகார் அளிக்கப்பட்டன. இவற்றில் 21 ஆயிரத்து 401 சம்பவங்கள் சிறுமிகளையும், 204 சம்பவங்கள் சிறுவர்களையும் சார்ந்தவை.

குழந்தை பாலியல் வன்முறைச் சம்பவங்களில் மராட்டிய மாநிலம் (2,832) முதலிடத்திலும், உத்தர பிரதேசம் (2,023) 2 ஆம் இடத்திலும், தமிழ்நாடு (1,457) 3 ஆம் இடத்திலும் உள்ளன.

2008 ஆம் ஆண்டு குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் 22 ஆயிரத்து 500 ஆக இருந்தநிலையில், 2018 ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 41 ஆயிரத்து 764 ஆக உயர்ந்தது. 2017 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 29 ஆயிரத்து 32 ஆக இருந்தது.

2018 ஆம் ஆண்டில், குழந்தைகள் கடத்தல் சம்பவங்கள் 44.2 சதவீதமும், 'போக்சோ' சட்டத்தில் பதிவான சம்பவங்கள் 34.7 சதவீதமும் நடந்தன. அதே ஆண்டில், காணாமல் போன குழந்தைகள் எண்ணிக்கை 67 ஆயிரத்து 134 ஆகும்.

குழந்தைகளை வைத்து ஆபாசப்படம் எடுத்த சம்பவங்களின் எண்ணிக்கை 781 ஆகும். குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் உத்தரபிரதேசம் முதலிடத்திலும், மத்தியபிரதேசம், மராட்டியம் ஆகியவை அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.



காப்பகங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் சம்பவங்கள், 30 சதவீதம் அதிகரித்துள்ளன. 501 குழந்தைத் திருமணங்கள் புகாருக்கு உள்ளாகி, தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. இது, முந்தைய ஆண்டைவிட 26 சதவீதம் அதிகம்.

அதே சமயத்தில், அசிட் வீச்சுச் சம்பவங்கள் குறைந்துள்ளன. 2017 ஆம் ஆண்டில் 244 அசிட் வீச்சுச் சம்பவங்கள் நடந்தநிலையில், 2018 ஆம் ஆண்டில் இது 228 ஆகக் குறைந்தது.

அசிட் வீச்சுச் சம்பவங்களில் மேற்கு வங்காளம் முதலிடத்திலும், உத்தரபிரதேசம், தெலுங்கானா ஆகியவை அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.

# காஷ்மீரில் கடும் பனிப்பொழிவு விமானப் போக்குவரத்து பாதிப்பு

காஷ்மீரில் கடும் பனிப்பொழிவு காரணமாக, விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீரில் நேற்று முன்தினம் சமவெளிப் பகுதிகளில் மிதமானது முதல் பலத்த பனிப்பொழிவு இருந்தது. காஷ்மீர் பள்ளத்தாக்கின் மலைப்பகுதிகள், ஜம்மு, லடாக் ஆகிய பிராந்தியங்களில் பனிப்பொழிவு மிக அதிகமாக இருந்தது. குறிப்பாக குப்வாராவில் 25 சென்டிமீட்டர் பனிப்பொழிவு காணப்பட்டது. இதனால், ஸ்ரீநகர் விமான நிலையத்தில் விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மதியம் வரை எந்த விமானமும் தரை இறங்க முடியவில்லை. ஒரு தனியார் நிறுவனம், ஒரு நாள் முழுவதுக்குமான தனது விமான சேவைகளை ரத்துச் செய்தது .

# பனி மூட்டத்தால் விபத்து



உத்தரபிரதேச மாநிலத்தில் பனிமூட்டம் காரணமாக அரசு பஸ் ஒன்று சாலைத் தடுப்பில் மோதி, பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. அதில் இருவர் பலியாகினர்.மேலும் 16 பேர் காயமடைந்தனர்.

ஆக்ராவிலிருந்து 40 பயணிகளுடன் லக்னோ நோக்கி சென்று கொண்டிருந்த அரசு பேருந்து, சிக்ராரா என்னுமிடத்தில் வளைவில் திரும்பும் போது சாலை தடுப்பில் மோதி பள்ளத்தில் கவிழ்ந்தது.

சாலையில் பஞ்சராகி நின்று கொண்டிருந்த லொறி பனிமூட்டத்தால் தெளிவாக தெரியாத நிலையில், அருகில் சென்றுவிட்ட பஸ்ஸை சாரதியினால் கட்டுப்படுத்த முடியவில்லை எனக் கூறப்படுகிறது.

# 200 போர் விமானங்களை வாங்க இந்திய விமானப்படை நடவடிக்கை



இந்திய விமானப்படைக்கு, 200 போர் விமானங்களை வாங்க இருப்பதாக, பாதுகாப்புத்துறைச் செயலாளர் அஜய் குமார் தெரிவித்திருக்கிறார்.

கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விமானப்படையின் திறனை அதிகரிப்பதில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய பா.ஜ.க. அரசு உறுதியாக உள்ளது என்றார்.

அந்த வகையில், 200 போர் விமானங்களைக் கொள்முதல் செய்ய உள்ளதாகத் தெரிவித்த அஜய் குமார், இதற்கான பணிகள் தொடங்கிவிட்டன எனவும் கூறினார்.

ஹிந்துஸ்தான் ஏரோனோட்டிக்ஸ் நிறுவனத்திடம் இருந்து, தேஜாஸ் மார்க்-1 என்ற 83 இலகு ரக போர் விமானங்களை வாங்குவதற்கான ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எஞ்சிய 110 விமானங்களை, 'அவுட் சோர்சிங்' மூலம் வாங்கவும் திட்டமிடப்பட்டிருப்பதாக, பாதுகாப்புத்துறைச் செயலாளர் அஜய்குமார் கூறியிருக்கிறார். விமானப்படையில் சுகோய் 30, மிராஜ் 2000, மிக் 29 மற்றும் ஜாகுவார்ஸ், மிக் 21 பைசன்ஸ் உள்ளிட்ட போர் விமானங்கள் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் ஏழு இடங்களில் ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி

மதுரை, கரூர், திருச்சி மாவட்டங்களிலுள்ள 7 இடங்களில் ஜல்லிக்கட்டு நடத்த அனுமதியளித்து அரசிதழில் தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இது குறித்து அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில், 1960 ஆம் ஆண்டு விலங்குகள் கொடுமைப்படுத்துதல் (prevention of cruelty to animals, 1960) தடுப்பு சட்ட 2ஆவது பிரிவில், 2017ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் மூலம் வரும் 16ஆம் தேதி முதல் 31 ஆம் திகதி வரை ஜல்லிக்கட்டு நடத்த அனுமதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கரூர் மாவட்டம் குளித்தலை தாலுகா ராச்சாண்டார் திருமலை கிராமத்திலும், மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தாலுகா பாலமேடு, அலங்காநல்லூர், திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் தாலுகா சூரியூர், மருங்காபுரி தாலுகா ஆவாரங்காடு, மணப்பாறை தாலுகா பூத மெட்டுப்பட்டி, கருங் குளம் ஆகிய இடங்களில் ஜல்லிக்கட்டு நடத்த அனுமதிக்கப்பட்டிருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# துருக்கியில் அகதிகள் படகு மூழ்கியதில் 11பேர் உயிரிழப்பு





அங்காரா,ஜன.14

துருக்கியில் படகு மூழ்கிய கோர விபத்தில் சிக்கி 11 அகதிகள் உயிரிழந்தனர்.

உள்நாட்டுப்போர், அடக்குமுறைகளுக்கு பயந்து உயிர் பிழைப்பதற்காகவும் பொருளாதார வசதிகள் தேடியும் சிரியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து அகதிகள் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்கிறார்கள்.

இந்த அகதிகளில் பெரும்பாலோர் துருக்கி வழியாக செல்கின்றனர். இந்த நிலையில், ஐரோப்பாவுக்கும், துருக்கிக்கும் இடையே 2016 ஆம் ஆண்டு ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தத் தில், ஐரோப்பாவிடம் இருந்து கணிசமான நிதி உதவியை பெற்றுக்கொண்டு, அதற்கு கைமாறாக ஐரோப்பிய நாடுகளுக்கு தங்கள் நாட்டின் வழியாக செல்கிற அகதிகளை தடுத்து நிறுத்த துருக்கி உறுதி அளித்தது.

ஆனாலும் துருக்கி வழியாக ஐரோப்பிய நாடுகளுக்கு செல்ல முயற்சிக்கிற அகதிகளின் எண்ணிக்கை அதிகமாகவே உள்ளது. அந்த வகையில், துருக்கியின் மேற்கு கடலோரப்பகுதியில் செஸ்மே நகருக்கு அருகே அகதிகள் படகு ஒன்று நேற்று முன்தினம் ஏஜியன் கடலில் மூழ்கியது.


இந்த கோர விபத்தில் 8 குழந்தைகள் உள்பட 11 அகதிகள் பரிதாபமாக உயிரிழந்தனர். 8 பேரை துருக்கி கடலோர காவல் படை பத்திரமாக மீட்டது.

# ஈராக்கில் உள்ள அமெ. படைத் தளம் மீது ஞாயிறன்று மீண்டும் ஏவுகணைத் தாக்குதல்

பாக்தாத்,ஜன.14

ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படைத் தளத்தின் மீது நேற்று முன்தினம் மீண்டும் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஈரானின் அண்டை நாடான ஈராக்கில் அமெரிக்கப் படைகள் உள்ளன. அங்குள்ள பிஸ்மாயக், அல் – ஆசாத் விமானப்படை தளம், எர்பில் உள்ளிட்ட சில இடங்களில் அமெரிக்க இராணுவ தளங்கள் உள்ளன. இதில் அல் – ஆசாத் விமானப்படை தளம், எர்பில் ஆகிய இடங்களில் உள்ள அமெரிக்க தளங்கள் மீது கடந்த 8 ஆம் திகதி ஈரான் ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தியது. தங்கள் நாட்டு இராணுவ தளபதி காசிம் சுலைமானியை அமெரிக்கா கொன்றதற்கு பதிலடியாக ஈரான் இந்தத் தாக்குதலை நடத்தியது.



அல் – ஆசாத் விமானப்படை தளத்தை 17 ஏவுகணைகளும், எர்பில் தளத்தை 5 ஏவுகணைகளும் தாக்கின என கூறிய ஈரான், இந்த தாக்குதலில் 80 அமெரிக்க வீரர்கள் பலியாகினர் எனத் தெரிவித்தது.

ஆனால், தங்கள் படைத் தளங்கள் தாக்கப்பட்டமையை ஒப்புக்கொண்ட அமெரிக்கா, உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று கூறியது.

ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியதை இங்கிலாந்து உள்ளிட்ட பல்வேறு நாடுகள் கண்டித்தன.

இதனால் ஈரான் – அமெரிக்கா இடையே பயங்கர மோதல் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. என்றாலும் இரு தரப்பிலும் அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில், ஈராக்கில் தலைநகர் பாக்தாத்துக்கு வடக்கே 90 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பலாட் விமானப்படை தளத்தில் உள்ள அமெரிக்க படை தளத்தின் மீது நேற்று முன்தினம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. மொத்தம் 8 'கட்யுா' ரக ஏவுகணைகள் வீசப்பட்டன.

இந்த விமானப்படைத் தளத்தில் முன்பு அமெரிக்கப் படையினர் முகாமிட்டு இருந்தனர் எனவும், ஆனால் அவர்களில் பெரும்பாலானவர்கள் அந்தத் தளத்தைக் காலி செய்து விட்டு சென்றுவிட்டனர் எனவும் ஈராக் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

சில ஏவுகணைகள் பலாட் விமானப்படைத் தளத்தின் ஓடுபாதையில் விழுந்து வெடித்தன எனவும், ஓர் ஏவுகணை நுழைவாயில் பகுதியைத் தாக்கியது எனவும் சலாஹுதின் மாகாண பொலிஸ் அதிகாரி முகமது காலில் தெரிவித்தார். ஏவுகணை விழுந்து வெடித்ததில் நுழைவாயில் பகுதியில் இருந்த ஈராக் இராணுவ வீரர்கள் 4 பேர் காயம் அடைந்தனர் எனவும் அவர் கூறினார்.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை யாரும் பொறுப்பேற்கவில்லை. இந்தத் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு மீண்டும் பதற்றம் ஏற்பட்டு உள்ளது.

# மழை வெள்ளத்தில் மிதக்கும் அமீரகம்!

அபுதாபி,ஜன.14

வரலாறு காணாத கனமழையால் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (அமீரகம்) வெள்ளத்தில் மிதக்கிறது. துபாயில் ஒரு மணி நேரத்தில் 15 செ.மீ. மழை கொட்டித் தீர்த்தது.

அபுதாபி, துபாய் உள்ளிட்ட அமீரகத்தின் பல்வேறு இடங்களில் கடந்த 3 நாளகளாக கன மழை கொட்டித் தீர்த்து வருகிறது. குறிப்பிட்ட சில பகுதிகளில் மழை வெளுத்து வாங்கி வருவதால் முக்கியமான சாலைகள், தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஏராளமான வாகனங்கள் நீரில் மூழ்கின. சில வாகனங்கள் தண்ணீரில் தத்தளித்தப்படி செல்கின்றன.

பல இடங்களில் சாலைகள் சேதம் அடைந்ததால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது. குடியிருப்புப் பகுதிகளையும் வெள்ளம் சூழ்ந்துள்ளதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

சூறாவளிக் காற்றுடன் கனமழை கொட்டுவதால் பொதுமக்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கி உள்ளனர். சில பகுதிகளில் கடுங்குளிரும் சேர்ந்து மக்களை வாட்டி வருகிறது.

பலத்த காற்றுக் காரணமாக அபுதாபி உள்ளிட்ட ஒரு சில இடங்களில் மரங்கள் மற்றும் மின் கம்பங்கள் சாய்ந்தன. ராசல் கைமா பள்ளத்தாக்கு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் அதில் சிக்கியவர்களை ஹெலிக்கொப்டர் உதவியுடன் பொலிஸார் மீட்டனர். அமீரகத்தின் அனைத்து பகுதிகளிலும் தேசிய பேரிடர் மீட்புக்குழு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு பகுதிகளில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கனமழையால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமான போக்குவரத்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 ஆண்டுகளுக்கு பிறகு அமீரகத்தில் கனமழை பெய்துள்ளது. துபாயில் நேற்று முன்தினம் மட்டும் ஒரு மணி நேரத்தில் 15 செ.மீ. மழை கொட்டித் தீர்த்துள்ளது. சாா்ஜா கோர்பக்கான் பகுதியில் கடந்த 3 நாளகளில் 184.8 மி.மீ. மழைபதிவானது.

கடந்த 1996 ஆம் ஆண்டு அல்அய்ன் பகுதியில் 144 மி.மீ மழை பெய்தது குறிப்பிடத்தக்கது.

# ஆஸியில் தீயில் தப்பித்த விலங்குகள் உணவின்றி உயிரிழக்கும் பேரவலம்

ஆஸ்திரேலியாவில் காட்டுத் தீயில் சிக்காமல் தப்பித்த விலங்குகள் உணவு கிடைக்காமல் உயிரிழக்கும் அவலம் ஏற்பட்டுள்ளது.


சிறிய கண்டத்தின் பெரும்பலான வனப்பகுதிகள் தீக்கிரையானமையால் லட்சக்கணக்கான உயிரினங்கள் அழிந்து போனதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்நிலையில் எஞ்சியிருக்கும் விலங்குகள் மீட்கப்பட்டு மீண்டும் காட்டுக்குள் விடுவிக்கப்பட்டு வருகின்றன.


தற்போது உயிர் பிழைத்த விலங்குகளுக்குக் காட்டுத் தீயைத் தொடர்ந்து புதிதாக சிக்கல் எழுந்துள்ளது. தீயின் கோரப் பிடியில் சிக்கி



உணவுத்தாவரங்கள் அழிந்து போனதால் உயிரினங்கள் பசியால் இறந்து வருகின்றன. இதனைத் தடுக்க ஆயிரக்கணக்கான தொன்கள் எடையில் கரட் மற்றும் உருளைக்கிழங்குகளை ஹெலிக்கொப்டர்கள் மூலம் ஆஸ்திரேலிய அரசு வனப்பகுதிக்குள் வீசி வருகிறது. இவை உணவாகவும், பின்னர் பயிராகவும் வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.











# ரணிலிடம் பெறமுடியாததை கோட்டாவிடம் பெறலாமென கூட்டமைப்பு நம்புகின்றதா?



நான்கரை வருடங்கள் கூட்டுக் குடும்பம் நடத்திய ரணிலிடம் பெறமுடியாதுபோன தமிழர்களுக்கான அரசியல் தீர்வை (சம்பந்தனுக்கான சொகுசு வீடு தவிர), வெட்டொன்று துண்டிரண்டாக தமிழரைத் தூக்கி வீசி, பெரும்பான்மை – சிறுபான்மை பேசும் கோட்ட பாயவிடம் பெறமுடியுமென்று கூட்டமைப்பு நம்பு கிறதா? நெஞ்சைத் தொட்டு சொல்ல வேண்டும்!

பொதுவாக ஒரு நாட்டில் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால் அதன் முதல் நூறு நாள்களை வைத்து அதனை மதிப்பீடு செய்வதும், விமர்சனம் செய்வதும் வழக்கம்.

ஆனால், கோட்டாபய ஆட்சியை ஒவ்வொரு வாரமும் மதிப்பீடு செய்யும் அளவுக்கு அதிரடியாகப் பல சம்பவங்கள் நடைபெறுகின்றன.

இதனால் தமிழர்களை விட சிங்களவர்களே – அதாவது அவரை ஆட்சிக்குக் கொண்டு வந்த சிங்கள,பௌத்தர்களே – இப்போது அதிர்ச்சியடைந்து காணப்படுகின்றனர். சிலர் நாட்டைவிட்டு ஓடவும் தொடங்கியுள்ளனர்.

அரசாங்க அலுவலகங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் ஊழல்கள், சுரண்டல், முறைகேடுகளைக் கண்டுபிடிக்க அதற்கென தனியானதொரு குழு பறக்கும் படையாகச் செயற்படும்.

ஆனால், இந்த வேலையை இப்போது கோட்டாபய தாமே செய்ய ஆரம்பித்துள்ளார். அரிசிக் குதங்கள், பொருள்கள் விற்பனை நிலையங்கள், மோட்டார் போக்குவரத்து அலுவலகங்கள், வைத்தியசாலைகள் போன்றவற்றுக்கு திடீர் பாய்ச்சல் நடத்தி புதுப்புது உத்தரவுகளைப் பிறப்பிக்கிறார்.

பல அதிகாரிகளை கையும் களவுமாகப் பிடித்து எச்சரிப்பதுடன், சிலரை உடனடியாக இடமாற்றமும் செய்கிறார்.

தம்மை ஆடம்பரமற்ற ஓர் ஆட்சித்தலைவராகக் காட்டுவதற்காக சாதாரண உடையில் தமது அலுவலகம் செல்கிறார். வெளிநாட்டுப் பிரமுகர்களைச் சந்திக்கும்போதும் அதே உடைதான்.

நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றச் செல்லும்போது மட்டும், வெள்ளைக்காரத் தேசிய உடையில் (கோட் சூட் சகிதம்) சென்றார். சிங்களத் தேசிய உடையணிந்தால் மஹிந்த பாணியில் குரக்கன் சால்வை அணிய வேண்டி வந்துவிடும் என்பதால் அதனைத் தவிர்த்திருக்கலாம்.

இராணுவத்தில் கடமையாற்றும்போதும், பாதுகாப்புச் செயலாளராகவிருந்தபோதும் இருந்த மனோபாவத்திலிருந்து தாம் மாறிவிட்டார் எனப் பொதுமக்களுக்குக் காட்ட எத்தனிக்கும் முயற்சிகளே அதிரடிப் பாய்ச்சல்களும், அடக்கமான செயற்பாடுகளுமென நோக்கினும், அதன் பின்னாலுள்ள ஏதோவென்று இவற்றை நம்பவைக்க மறுக்கிறது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளராக சஜித்தை ஆதரித்து பரப்புரை செய்த அல்லது கோட்டாபயவை தாராளமாக விமர்சித்த முன்னாள் அமைச்சர்கள் அடுத்தடுத்துக் கைதாகி வருகின்றனர்.

வாகன விபத்துத் தொடர்பாக பாட்டாலி சம்பிக்க ரணவக்க கைதாகி பிணையில் விடுதலையானார். வெள்ளைவான் விவகாரம் தொடர்பாக ராஜித சேனரத்ன தேடப்பட்டதையடுத்து அவர் நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் விடுதலை பெற்றார். அனுமதியற்ற துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் ரஞ்சன் ராமநாயக்க (இவர் ஒரு நடிகரும் கூட) கைதாகிப் பிணையில் வெளியே வந்துள்ளார்.

அடுத்தடுத்துக் கைதாகப் போவதாக மேலும் பல முன்னாள் அமைச்சர்களின் பெயர்கள் அடிபடுகின்றன. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கைது செய்யுமாறு கொழும்பில் அரசாங்க ஆதரவாளர்களும் பிக்குகளும் பேரணி நடத்தியுள்ளனர்.

சட்டமும் ஒழுங்கும் நீதிபரிபாலனமும் ராஜபக்ஷ குடும்பத்தின் பொக்கற்றுக்குள் இருக்குமாயின் அவர்கள் விரும்பாத சகலருமே கைதாகலாம்.

நல்லாட்சிக் காலத்தில் மஹிந்த குடும்பத்தின் பலர் கைதாகி சிறையில் அடைக்கப்பட்ட காயத்துக்கு இப்போது வைத்தியம் செய்யப்படுகிறது போலும்.

இவையெல்லாவற்றுக்கும் பரிகாரம் காணுவதற்கு சட்டப்படியான சில நடவடிக்கைகளை கோட்டாபய ஆரம்பித்துள்ளார்.

1972இல் சிறிமாவோ பண்டாரநாயக்க புதிய அரசமைப்பை உருவாக்கியபோது சிலோன் என்ற இலங்கையின் ஆங்கிலப் பெயரை மும்மொழியிலும் சிறிலங்கா என மாற்றி, ஜனநாயக சோசலிச சிறிலங்கா குடியரசு என சிங்களப் பெயர் சூட்டி மகிழ்வடைந்தார்.

அதே அரசமைப்பில் தமக்குச் சாதகமான பல மாற்றங்களைச் செய்து, சகல நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை உருவாக்கிய ஜே.ஆர். ஜெயவர்த்தன, தம்மைத்தாமே முதலாவது ஜனாதிபதியாக்கினார். இதற்கென தேர்தல் நடத்தி அவர் ஜனாதிபதியாகவில்லையென்பதை இங்கு கவனிக்க வேண்டும்.

இப்போது ஜனாதிபதியாக வந்துள்ள கோட்டாபய தமது விருப்பத்துக்கேற்றவாறான, சிங்கள,பௌத்த முதன்மை அரசமைப்பை உருவாக்க உத்தேசித்துள்ளார். அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை இப்போது இல்லாததால் புதிய உத்தியொன்றை கையாள்கிறார். ஜனநாயக இராணுவக் குடியரசு என்பது இதற்கான மறைபெயர்.

இதற்கான முதற்கதவு திறக்கப்பட்டுள்ளது. பதின்மூன்றாம், பத்தொன்பதாம் திருத்தங்களை ஒட்டுமொத்தமாகத் துடைத்தழிக்க இவர் விரும்புகிறார்.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் கீழ் பதின்மூன்றாம் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இதன் மூலப்பிரசவம்தான் ஒன்பது மாகாண சபைகள். இச்பைகளுக்கு காணி மற்றும் காவற்துறை அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென பதின்மூன்றாம் திருத்தம் கூறுகிறது.

ஜனாதிபதியாகத் தெரிவான சில நாள்களுக்குள் இந்தியா சென்ற கோட்டாபயவிடம் பிரதமர் மோடி பதின்மூன்றாம் திருத்தத்தை விரைந்து அமுல்படுத்துமாறு கோரியபோது அதற்கு எந்தப் பதிலையும் கோட்டாபய அளிக்கவில்லை.



ஆனால், அங்கு நிற்கும்போதே இந்து பத்திரிகைக்கு அளித்த செவ்வியொன்றில், பெரும்பான்மை மக்கள் ஏற்காதவற்றையும், விரும்பாதவற்றையும் தம்மால் நிறைவேற்ற முடியாது என்று கூறி, பதின்மூன்றாம் திருத்தத்தை அமுல் செய்ய கையை விரித்தார்.

ஜே. ஆர். ஜெயவர்த்தன, ராஜீவுடன் ஒப்பந்தம் செய்யும்போது பிரதமர் பிரேமதாஸ, பாதுகாப்பு பிரதி அமைச்சர் அத்துலத் முதலி மற்றும் ஜே.வி.பி. தரப்பினர் ஆகியோர் அதனை வன்மையாக எதிர்த்தனர். பிரேமதாஸ ஆதரவாளரான கடற்படைச் சிப்பாய் ஒருவர் ராஜீவை கொழும்பில் வைத்து தாக்கும் முயற்சியும் இடம்பெற்றது.

இவற்றை நினைவில் வைத்தே 'பெரும்பான்மை மக்கள் ஏற்காத' என்ற சொற்பதத்தை கோட்டாபய பயன்படுத்துகிறார்.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் 1988 ஜூலையில் கைச்சாத்திடப்பட்டது. 1988 பெப்ரவரியில் அமெரிக்கத் தூதுவரான கல்பிரெய்த் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவை சந்தித்தபோது 'இந்தியாவுடன் இந்த ஒப்பந்தத்தைச் செய்வதற்கு நான் நிர்ப்பந்திக்கப்பட்டேன்' (ஐ றயள கழசஉநன ஷவெழ ய ளநயட றஷ்வா ஜனெயை) என்று ஜே.ஆர். தெரிவித்த தகவல் அமெரிக்காவில் ஆவணமாக இருப்பதை 'இந்து' பத்திரிகையே இந்த வாரம் பகிரங்கமாக்கியுள்ளது.

இதனூடாக வெளிக்கொணரப்படும் கருத்தானது, ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்த ஒப்பந்தத்தை விரும்பவில்லையென்பது.

இப்படிப் பார்க்கின், பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்குவதற்கு கோட்டாபய எடுக்கும் முயற்சி சரியானது என்கின்ற கருத்து வெளிக்கொணரப்படுகின்றது. எந்தவொரு ஒப்பந்தமானாலும் நாட்டின் இறையாண்மைக்குப் பாதகம் ஏற்படுமாயின் அதனை நீக்கலாமென்று சிங்களத்தரப்புசுட்டுகின்றது.

இதுபோன்றே, நல்லாட்சிக் காலத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பறித்த பத்தொன்பதாவது திருத்தத்தையும் நீக்கும் முயற்சி ஆரம்பமாகியுள்ளது. தனிநபர் பிரேரணை ஒன்றும், இருபத்தியோராவது அரசியல் திருத்த சட்டமூலமும் இதனை நோக்கியவை.

இவை எந்தளவுக்கு வெற்றி பெறுமென்பதை அடுத்த சில மாதங்களுக்குப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இவ்வாறான சூழ்நிலையில் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை கோட்டாபய நிறைவேற்றுவாரா என்ற கேள்வி எழுகிறது. கடந்த வாரம் தமது கொள்கை விளக்க உரையில் இனப்பிரச்சனை தீர்வு பற்றி எதுவுமே கோட்டாபய குறிப்பிடவில்லை. அபிவிருத்தி என்பது மட்டுமே இவரது உரையின் மையப்பொருள்.

'சிங்கள மக்கள் வாக்கு உங்களுக்கானது. எங்கள் மக்கள் எங்களுக்கே வாக்களித்தனர். ஆதலால் எங்களுடனேயே பேசி பிரச்சனையைத் தீர்க்க வேண்டும்' – என்று கூட்டமைப்பு கூறுகிறது. கோட்டாபயவுடன் பேச்சு நடத்தத் தயார் என்று மீண்டும் மீண்டும் கூறுகிறார் கூட்டமைப்பின் தோழமைக் கட்சியின் தலைவர் சித்தார்த்தன்.

விடுதலைப் புலிகளை அழிக்கும்போது கூறிய உறுதிமொழிகளை எல்லோரும் மறந்து எம்மை ஏமாற்றிவிட்டனர் என்று புராணம் பாடுகிறார் சம்பந்தன்.

புதிய அரசமைப்பு வரும் சாத்தியம் தெரியவில்லையென்று கூறும் சுமந்திரன், ரணில் அரசு தயாரித்த புதிய அரசமைப்பை அந்த இடத்திலிருந்து தொடருமாறு கோட்டாபய அரசிடம் கோரியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் சந்தித்தபோது கூட்டமைப்பினருடன் பேச்சு நடத்துவேன் என்று கோட்டாபய கூறினார் என சம்பந்தனை மேற்கோள்காட்டி ஊடகங்களில் செய்திகள் வந்துள்ளன. இதனை அதிகாரபூர்வமாக ஜனாதிபதி செயலகம் தெரிவிக்கவில்லை.

எட்டு மாதங்களுக்கு முன்னர் இலங்கை சென்ற இந்தியப் பிரதமர் மோடி சில நிமிடங்கள் சம்பந்தனுடன் பேசியபோது, 'இந்தியா வாருங்கள். பேசுவோம்' என்று கூறிச் சென்றார்.

இன்றுவரை அது நடைபெறவில்லை. அப்படியான ஒன்றுதான் கோட்டாபயவின் அழைப்போ தெரியாது.

நான்கரை வருடங்கள் கூட்டுக் குடும்பம் நடத்திய ரணிலிடம் பெறமுடியாதுபோன தமிழர்களுக்கான அரசியல் தீர்வை (சம்பந்தனுக்கான சொகுசு வீடு தவிர), வெட்டொன்று துண்டிரண்டாக தமிழரைத் தூக்கி வீசி, பெரும்பான்மை – சிறுபான்மை பேசும் கோட்டாபயவிடம் பெறமுடியுமென்று கூட்டமைப்பு நம்புகிறதா? நெஞ்சைத் தொட்டுச் சொல்ல வேண்டும்!

பனங்காட்டான்
கனி

நன்றி - பதிவு இணையம்

# மிலேனியம் உடன்பாட்டை ஒருபோதும் ஏற்கமாட்டேன்

## சஜித் பிரேமதாஸ சூளுரை



கொழும்பு, ஜன. 14

மிலேனியம் சவால் உடன்படிக்கையை அமுல்படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேதமதாஸ தெரிவித்துள்ளார். கெஸ்பேவயில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்–

மிலேனியம் சவால் உடன்படிக்கையை அமுல்படுத்துவதற்கு எதிர்க்கட்சி ஒருபோதும் இடமளிக்காது. பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திர தினத்தன்று கட்சி, எதிர்க்கட்சி பேதங்களின்றி ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இணைந்து மிலேனியம் சவால் உடன் படிக்கையைத் துண்டு துண்டாகக் கிழிப்பதற்கு தயார் – என்றார்.

# போர்க்குற்றங்களுக்கு பொறுப்பு கோட்டாவே!

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 14

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களுக்கு அப்போது பாதுகாப்புச் செயலராக இருந்த தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே முழுப் பொறுப்புக் கூறவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டு மக்களின் ஜனநாயக மரபுக்கமைய ஆட்சிப்பீடம் ஏறியுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கைக்கு எதிரான ஐ.நா. தீர்மானங்கள் தொடர்பில் பதிலளிக்க வேண்டும்.

அத்துடன், மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேசம் ஏற்கும் சுயாதீன விசாரணையை நடத்தியே ஆகவேண்டும்.

மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் ஊழல், மோசடி செய்தவர்களையும், நல்லாட்சியில் ஊழல், மோசடி செய்தவர்களையும் நல்லாட்சியில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவே காப்பாற்றினார். ஊழல், மோசடியாளர்களுக்கு அடைக்கலம் கொடுத்த முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி தோல்வியடைந்தமைக்கான முழுப் பொறுப்பும் ஏற்கவேண்டும்.

ஊழல், மோசடி விவகாரத்தால்தான் நல்லாட்சி கவிழ்ந்தது. குற்றவாளிகளுக்குத் தக்க தண்டனை வழங்கியிருந்தால் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பார். அதேவேளை, நல்லாட்சியும் தொடர்ந்திருக்கும் – என்றார். (ஐ)

# யாழ் இந்துவின் சமூகத்தின் பொங்கல் திருவிழா நாளை





யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சமூகம் நடத்தும் பொங்கல் திருவிழா நாளை புதன்கிழமை பொங்கலன்று கோலாகலமாக இடம்பெறவுள்ளது.

யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களின் ஏற்பாட்டில், காலை 9.30 மணி முதல் பொங்கல் நிகழ்வுகளுடன் கூடிய பண்பாடு அம்சங்களை உள்ளடக்கிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. காலை 10.00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் இருந்து சிலம்பாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், மாட்டு வண்டி பவனி ஆகிய பாரம்பரிய அம்சங்களுடன் கூடிய பண்பாட்டு நடைபவனி யாழ் நகரை வலம்வரும். பண்பாட்டு நடைபவனியானது கல்லூரி முன்றிலில் ஆரம்பித்து காங்கேசன் துறை வீதியினூடாக வைத்தியசாலை வீதியை அடைந்து கஸ்தூரியார் வீதியூடாக மீண்டும் கல்லூரியினை வந்தடையும்.

தமிழர் தலை நிமிர் கழகத்தின் பொங்கல் திருவிழாவில் இணைந்து எமது பாராம்பரியங்களினையும் பண்பாட்டு அம்சங்களினுடனும் இணைந்து தமிழர் திரு நாளினை கொண்டாட அனைவரினையும் அன்புடன் அழைக்கின்றோம் என நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# விமானத்தில் பயணித்த இரண்டு பேர் உயிரிழப்பு

## கட்டுநாயக்கவில் அவசர தரையிறக்கம்!

கொழும்பு, ஜன. 14

ஜெட்டாவில் இருந்து இந்தோனேஷியாவின் சுரபயா விமான நிலையம் நோக்கிப் பயணித்த தாய் எயார்வேய்ஸ் விமானம் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறங்கியுள்ளது.

இந்த விமானத்தில் இரண்டு பயணிகள் சுகயீனமடைந்துள்ளமையால் அவசரமாகத் தரையிறக்க அனுமதியளிக்குமாறு விமானி கோரிக்கை விடுத்திருந்தார்.

அதற்கமைய நேற்று அதிகாலை 2.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது.

எனினும் விமானத்தில் சுகயீனமடைந்ததாகக் கூறப்படும் இரண்டு நபர்களும் உயிரிழந்துள்ளனர் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தோனேஷியாவைச் சேர்ந்த பெண் மற்றும் ஆண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இந்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# வவுனியா பல்கலைக்கழகத்தை அமைக்க அமைச்சரவைப் பத்திரம்

கொழும்பு, ஜன. 14

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை வவுனியா பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கான அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த அமைச்சரவைப் பத்திரத்தைத் தாக்கல் செய்துள்ளார் என ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் கு.திலீபன் தெரிவித்தார். (ஐ)

# தலைமைத்துவத்தை என்னிடம் தாருங்கள்!

## கேட்கிறார் ஆனந்தசங்கரி



கிளிநொச்சி, ஜன. 14

தமிழ் அரசியல் தலைமையைத் தன்னிடம் வழங்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

கிளிநொச்சியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மக்கள் தலைமையை மாற்றச் சொல்லிக் கேட்கிறார்கள். இருந்த தலைமையை என்னிடம் தாருங்கள், என்னால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். சமஷ்டி இனிச் சரிவராது என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். இந்திய முறையிலான தீர்வை முன்வைத்து தமிழர் விடுதலை கூட்டணி போட்டியிட உள்ளது. இந்திய முறையிலான தீர்வை தற்போது உள்ள நாட்டின் இரு பிரதான தலைவர்களும் அறிந்தவர்கள். அவர்கள் அதனை ஏற்றவர்கள்.

இந்த நிலையில் அந்த முறையை முன்னிலைப்படுத்தி நாம் போட்டியிட உள்ளோம். கிழக்கில் உள்ள பலருடன் பேசியுள்ளோம். அவர்களும் இணைந்து செயற்படுவதற்கு உள்ளனர். அதேபோன்று வடக்கிலும் அவ்வாறான கூட்டு ஒன்று உருவாக்கப்படும்.

நான் பகிரங்கமான அழைப்பை விடுக்கின்றேன். தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து பிரிந்து சென்ற அத்தனை பேரும் மீண்டும் இணையுங்கள். எனக்கு வயது 87 ஆகியுள்ளது. இந்த நிலையில் பாரம்பரிய கட்சியைப் பாதுகாப்பதற்கான சூழல் தற்போது எழுந்துள்ளது.

வெவ்வேறு காரணங்களைக் கூறி தமிழர் விடுதலை கூட்டணியிலிருந்து பிரிந்து சென்று தமிழரசுக் கட்சியில் இணைந்தவர்கள் இன்று விட்ட தவறுகளை உணர்கின்றீர்கள் என நம்புகின்றேன். தற்போது ஏற்பட்டுள்ள சூழலை கருத்தில்கொண்டு மீண்டும் இந்தக் கட்சியைப் பலம் மிக்க கட்சியாகச் செயற்படுத்த மீள இணையுமாறு அழைக்கின்றேன் – என்றார். (ஐ)




# டோனி இல்லாமல் ரசிகர்கள் ஏமாற்றம்

நியூசிலாந்து அணிக்கு எதிரான ரி – 20 தொடரில் பங்கேற்கும் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுபயணம் செய்து 5 ரி – 20 போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது.

சுற்றுப் பயணமானது ஜனவரி 24ஆம் திகதி ரி –20 தொடருடன் தொடங்கவுள்ளது.

இந்நிலையில் ரி –20 தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து அணியில் புறக்கணிக்கப்பட்ட மகேந்திர சிங் டோனி இம்முறையும் அணியில் சேர்க்கப்படவில்லை.

இது ரசிகர்களுக்கு ஏமாற்றத்தை கொடுத்துள்ளது. இந்திய அணி விபரம் வருமாறு,

கோஹ்லி (அணித்தலைவர்), ரோகித் சர்மா (துணைத்தலைவர்), கே.எல் ராகுல், ஷிகர் தவான், ஸ்ரேயால் அய்யர், மனீஷ் பாண்டே, ரிஷப் பாண்ட் (விக்கெட் கீப்பர்), ஷிவம் தூப், குல்தீப் யாதவ், சஹால், வாஷிங்டன் சுந்தர், ஜஸ்பிரித் பும்ரா, முகமது ஷமி, நவ்தீப் சைனி, ரவீந்திர ஜடேஜா, ஷர்துல் தகூர்.

# தொடரை இழந்தமைக்கு நானும் ஒரு காரணமே!

இந்திய அணிக்கெதிரான 20/20 தொடரை இழந்தமைக்கு தானும் ஒரு காரணம் என இலங்கை அணியின் தலைவர் லசித் மலிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியத் தொடரை நிறைவு செய்து நாடு திரும்பியுள்ள நிலையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், நாங்கள் 2:0 என தொடரை முழுமையாக இழந்துள்ளோம். நான் சிறப்பாக செயற்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் ரி–20 கிரிக்கெட்டில் நான் அனுபவம் உள்ள வீரர்.

ஆனால் இந்தத் தொடரில் ஒரு விக்கெட்டைக் கூட நான் கைப்பற்றவில்லை. இதனால் தான் நாங்கள் தொடரை இழந்த சூழ்நிலையில் உள்ளோம்.

ரி – 20 போட்டிகளில் இலங்கை அணியில் உள்ள வீரர்களில் அதிக அனுபவம் கொண்டவன் நான். வழக்கமாக விக்கெட்டுகள் கைப்பற்றக்கூடிய பந்து வீச்சாளர் என்பதால் விக்கெட் வீழ்த்தவேண்டும் என்ற நெருக்கடி எனக்கு இருந்தது.

ஆனால் என்னைப் பொறுத்தவரை நாங்கள் வெற்றிபெற வேண்டுமானால் முதல் 6 ஓவர்களுக்குள் ஒன்றிரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தியாகவேண்டும். அதை நாங்கள் இந்தத் தொடரில் செய்யவில்லை. இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சிறந்த இணைப்பாட்டத்தினை அமைத்தனர்.

ரி – 20 போட்டிகளில் இணைப்பாட்டம் மிகவும் முக்கியமாகும். எங்கள் அணி வீரர்களால் துடுப்பெடுத்தாட முடியும். அதிரடியாக விளையாட முடியும். ஆனால் அவர்கள் ஆட்டத்தைக் கட்டமைப்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும். இதில்தான் அவர்கள் தேக்கம் அடைகின்றனர்.

கடந்த காலங்களில் குமார் சங்கக்கார, ஜெயவர்தன, டில்ஷான் ஆகியோருக்கு இன்னிங்ஸை எப்படிக் கட்டமைப்பது என்பது தெரிந்திருந்தது. தற்போது அணியில் உள்ள இளம் வீரர்கள் திறன் உள்ளவர்கள்தான். தங்களது ஷொட்களை விளையாட அவர்கள் விரும்புகின்றனர்.

ஆனால் சில நேரங்களில் அமைதியாக இருக்க வேண்டும். நிலைமையைக் கையாளவேண்டும். இந்த பகுதியில் அவர்கள் சுணக்கம் அடைகின்றனர். அனுபவம் வாய்ந்த வீரர்கள் அணியில் இருந்தால் நிலைமையை அவர்கள் கையாள்வார்கள். அணித் தலைவரின் பணி எளிதாக இருக்கும்.

ஆனால் அந்த வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. தற்போதுள்ள வீரர்கள் அனுபவம் இல்லாதவர்கள். அவர்களை வழி நடத்துகிறேன். பொறுத்திருந்து பார்ப்போம் என்று குறிப்பிட்டுள்ளார்.

# சேர்பியா அணி சம்பியன்!

ஆண்களுக்கான ரென்னிஸ் உலகக்கிண்ணம் என வர்ணிக்கப்படும் ஏடிபி கிண்ண ரென்னிஸ் தொடரில் சேர்பியா அணி, சம்பியன் பட்டம் வென்றுள்ளது.



ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு – இரட்டையர் பிரிவு என நடைபெறும் இத்தொடரில், இரண்டு ஒற்றையர் பிரிவு, ஒரு இரட்டையர் பிரிவு என மூன்று போட்டிகள் நடைபெறும். இதில் இரண்டு போட்டிகளில் வெற்றி பெறும் அணி சம்பியனாக தெரிவு செய்யப்படும்.

இதற்கமைய நேற்று முன் தினம் நடைபெற்ற முதல் ஒற்றையர் பிரிவு போட்டியில், உலகின் முதல் நிலை வீரரான ஸ்பெயினின் முன்னணி வீரர் ரபேல் நடாலும், சேர்பியாவின் நோவக் ஜோகோவிச்சும் பலப்பரீட்சை நடத்தினர்.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், முதல் செற்றை நோவக் ஜோகோவிச் எவ்வித அழுத்தமும் இல்லாமல், 6 –2 என கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செற்றில், நோவக் ஜோகோவிச்சுக்கு நடால் கடும் நெருக்கடி கொடுத்தார். இதனால் செற்றை பிரேக் வரை நகர்ந்தது.

இதில் விட்டுக் கொடுக்காமல் சிறப்பாக விளையாடிய நோவக் ஜோகோவிச், செற்றை 7 – 6 என கைப்பற்றி 1 புள்ளியை பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது ஒற்றையர் பிரிவு போட்டியில், செர்பியாவின் டுசான் லாஜோவிக்கும், ஸ்பெயினின் ரொபர்டோ பாடிஸ்டா அகுட்டும் மோதினர்.

இரசிகர்களுக்கு உச்ச விறுவிறுப்பை பரிசளித்த இப்போட்டியில், முதல் செட்டை 7 –5 என ரொபர்டோ பாடிஸ்டா அகுட் கடுமையாக போராடி வெற்றிக் கொண்டார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செற்றில், டுசான் லாஜோவிக், பாடிஸ்டா அகுட்டுக்கு கடும் நெருக்கடி கொடுப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், அந்த எதிர்பார்ப்புக்களை பொய்யாக்கிய பாடிஸ்டா அகுட், செற்றை 6–1 என எளிதாக வென்று 1 புள்ளியை பெற்றுக் கொண்டார்.

இரு அணியினரும் தலா 1 புள்ளியை பெற்றுக் கொண்டதால், மகுடத்தினை சூடப் போகும் அணி யார் என்பது குறித்த எதிர்பார்ப்பு இரசிகர்கள் மத்தியில் எகிறியது.

இதனால் இரட்டையர் பிரிவு போட்டி, பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. இதில் செர்பியா அணி முதல் செற்றை 6 – 3 என கைப்பற்றியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செற்றிலும், சேர்பியா அணியின் ஆதிக்கம் தொடர்ந்தது. இதில் செர்பியா அணி 6 – 4 என செற்றைக் கைப்பற்றி 2 – 1 என்ற புள்ளிகள் அடிப்படையில் சம்பியன் பட்டத்தை வென்றது.

நடப்பு ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் தொடரிலேயே சேர்பியா அணி, சம்பியன் பட்டம் வென்று சாதித்தது. இத்தொடரில் 24 அணிகள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஒருநாள் தொடரை முழுமையாக கைப்பற்றியது மேற்கிந்தியத் தீவு

அயர்லாந்து அணிக்கெதிரான மூன்றாவதும், இறுதியுமான ஒருநாள் போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி டக்வத் லுயிஸ் முறைப்படி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை, மேற்கிந்தியத் தீவுகள் அணி முழுமையாக கைப்பற்றியது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய அயர்லாந்து அணி, 49.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 203 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஹென்ரிவ் பல்பிரைன் 71 ஓட்டங்களையும், என்டி மெக்பிரைன் ஆகியோர் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பந்துவீச்சில், ஹெய்டன் வோல்ஷ் 4 விக்கெட்டுகளையும், ஒசேன் தோமஸ் 3 விக்கெட்டுகளையும், ரோஸ்டன் சேஸ் 2 விக்கெட்டுகளையும், ரோமாரியோ செப்பர்ட் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 204 என்ற வெற்றி இலக்கையும் நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 36.2 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 199 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை, மழைக் குறுக்கிட்டது.

இதனால் போட்டியின் வெற்றி தீர்மானிப்பதற்கு டக்வோத் லுயிஸ் முறை கடைபிடிக்கப்பட்டது. இதனால் மேற்கிந்திய தீவுகள் அணி டக்வத் லுயிஸ் முறைப்படி 5 விக்கெட்டுகளால் வெற்றியை பதிவு செய்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, எவீன் லீவிஸ் 102 ஓட்டங்களையும், நிக்கோலஸ் பூரான் ஆட்டமிழக்காது 43 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.




என்டி மெக்பிரைன் 2 விக்கெட்டுகளையும், பார்ரி மெக்கார்தி, கிரைஜ் யங், சிமி சிங் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் மேற்கிந்திய தீவுகள் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் எவீன் லீவிஸ் தெரிவு செய்யப்பட்டார்.

# கட்சித் தலைமைப் பதவியை கைவிடாதிருக்க ரணில் முடிவு

## ஐ.தே.க. முக்கிய புள்ளிகள் மஹிந்தவுடன் ரகசிய பேச்சு

கொழும்பு, ஜன. 14

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் இவ்வாரம் மாற்றங்கள் வருமென எதிர்பார்க்கப்பட்டாலும் அப்படி ஒன்று நடக்காதெனவும் தலைமைப் பதவியை ரணில் விட்டுக் கொடுக்கும் சூழ்நிலை இல்லையென்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை, கரு ஜயசூரிய ,சஜித் பிரேமதாஸ ஆகியோரைக் கொண்ட தலைமைத்துவச் சபை ஒன்றை இவ்வாரம் அமைக்க ரணில் திட்டமிட்டுள்ளார். ஆயினும் சஜித் தரப்பு அதனை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லையெனத் தெரிகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ நெருக்கடி மிக உச்சக் கட்டத்தை அடைந்துள்ள இந்தப் பின்னணியில் அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இரகசியப் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மை கொண்ட ஆட்சியொன்றை அமைக்கும் வகையிலான அரசை அமைப்பது குறித்தும் அது தொடர்பான அரசியல் குறித்தும் இந்தப் பேச்சுக்களின்போது ஆராயப்படுவதாக அறிய



முடிந்தது.

இதற்கிடையில் இவ்வாரம் ஐக்கிய தேசியக் கட்சி செயற்குழு கூடும்போது தலைமைத்துவ விவகாரம் தொடர்பில் வாக்கெடுப்பு எதுவும் நடத்தப்படமாட்டாதென மேலும் அறியமுடிந்தது. (ஐ)

# மகாபொல கொடுப்பனவு 7 ஆயிரம் ரூபாவாக உயர்வு

கொழும்பு, ஜன. 14

மகாபொல புலமைப்பரிசில் பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் மேலதிக கொடுப்பனவு 7000 ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளார் என உயர் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போது மாணவர்களுக்கு 5000 ரூபா மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படுவதாகவும் இது பல்கலைக் கழக விடுதியில் தங்கும் அவர்களின் செலவுகளை ஈடு செய்யப் போதுமானதாக இல்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதிக்கு முன்னர் இந்த உதவித்தொகையை பல்கலைக் கழக மாணவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக அனுப்ப அரசு தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மகாபொல உதவித்தொகை நிதியம் இப்போது வெறும் 100 கோடி ரூபாவாகக் குறைந்துள்ளது என்றும் அதனை மேலும் அதிகரிக்க முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அதன்படி, மகாபொல நிதிக்காகப் பிரத்தியேகமாக ஒரு புதிய சீட்டிழுப்பை அறிமுகப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது என்றும் இந்த நிதிக்கான பணத்தைத் திரட்டுவதற்காக விரைவில் மகாபொல கண்காட்சி மற்றும் வர்த்தக கண்காட்சியை மீண்டும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

# ஹெரோய்னுடன் இரவு இளைஞர்கள் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜன. 14

ஹெரோய்ன் போதைப்பொருளுடன் இரண்டு இளைஞர்கள் நேற்று முன் தினம் இரவு சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு மோட்டார் சைக்கிளில் ஹெரோய்ன் எடுத்து வந்தபோது, சங்குப்பிட்டி பாலப் பகுதியில் வைத்து நேற்று முன் தினம் முன்னிரவு பொலிஸார் இவர்களை மடக்கிப் பிடித்தனர்.

இவர்களிடமிருந்து 12.5 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர்களில் ஒருவர், நேற்று முன் தினம் இரவே சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பொலிஸார் தன்னைத் தாக்கினர் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் 20 வயதுடைய இளைஞன் ஆவார் .(ஐ)

# விரைவில் ரணில் சி.ஐ.டிக்கு!



கொழும்பு, ஜன. 14

தன்னைக் கொல்லச் சதித்திட்டம் தீட்டியதாக முன்னாள் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு எதிராக, இராஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே வழங்கிய முறைப்பாட்டையடுத்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த விசாரணை சி.ஐ.டியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, முதலில் மஹிந்தானந்த அளுத்கமகே வாக்குமூலமளிக்க அழைக்கப்படவுள்ளார். அதைத் தொடர்ந்து, ரஞ்சன், ரணில் ஆகியோரும் சி.ஐ.டிக்கு அழைக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, ரஞ்சனின் தொலைப்பேசி உரையாடல்கள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதாக அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரஞ்சன் ராமநாயக்கவிடம் இருந்து கைப்பற்றப்பட்ட இறுவட்டுக்கள் அடங்கிய பொருள்களை அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்திடம் முன்வைத்து அது தொடர்பான அறிக்கை ஒன்றை பெற்றுக்கொள்ளுமாறு கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு நுகேகொடை நீதிவான் நீதிமன்றம் கடந்த 9 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தது.

அதற்கமைவாக கைப்பற்றப்பட்ட இறுவட்டுக்கள் அடங்கிய பொருள்களை அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்திடம், குற்றப்புலனாய்வுப் பிரிவு ஒப்படைத்துள்ளது. (ஐ)





# சம்பிக்கவுக்கு ஐ.தே.கவில் விரைவில் முக்கிய பதவி!



கொழும்பு, ஜன. 14

ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்கவுக்கு எதிர்காலத்தில் ஐ.தே.கவின் மிக முக்கியமான பொறுப்பு வழங்கப்படவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு வாக்களித்தவர்களுக்கு நன்றி தெரிவித்து வரும் சஜித், கொஸ்கம, கலுவாகம பகுதியில் மக்களைச் சந்தித்து உரையாடியபோது இதனை கூறினார்.

சம்பிக்க போன்ற படித்த, புத்திசாலித்தனமானவர்களுக்காக கட்சியின் கதவு திறந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

# நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் 'தமிழர் திருநாள்' பொங்கல் விழா

முல்லைத்தீவு, ஜன. 14

சிங்கள மயமாக்கலின் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழர் திருநாள் பொங்கல் உற்சவம் இடம்பெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

வருடம் தோறும் தைப்பொங்கல் தினத்துக்கு முதல் நாள் (14) தமிழர் திருவிழா பொங்கல் நிகழ்வுகள் நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெறும் நிலையில் இவ் வருடமும் பொங்கல் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெறவுள்ளன.

இன்று காலை 8.30 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி தொடர்ந்து பொங்கல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. எனவே அனைத்து மக்களையும் இந்தப் பொங்கல் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு நீராவியடி பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



# அடக்குமுறையை தூண்டி இலங்கையை இராணுவமயமாக்குவதற்கு நடவடிக்கை

## சர்வதேச அமைப்புகள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 14

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசு, இரு மனித உரிமைக் குழுவினர், விமர்சகர்கள் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்களைக் குறிவைத்து அடக்குமுறையைத் தூண்டும் செயலைக் கட்டவிழ்த்து இலங்கையை இராணுவமயமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக சர்வதேச அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் மற்றும் இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள் என்ற அமைப்பு ஆகியன இணைந்து வெளியிட்டுள்ள கூட்டு அறிக்கையிலேயே இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு முன்னும் பின்னும் ஊடகவியலாளர்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், வழக்கறிஞர்கள், கல்வியாளர்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களைக் குறிவைத்து 69 மிரட்டல் மற்றும் அச்சுறுத்தல் சம்பவங்களை இந்த இரு மனித உரிமைகள் குழுக்களும் ஆவணப்படுத்தியுள்ளன என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் சில சந்தர்ப்பங்களில் அச்சுறுத்தல்கள் மிகவும் தீவிரமாக இருந்தன என்றும் சிலர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சர்வதேச சமூகம் இலங்கைக்கு அளித்து வரும் பாதுகாப்பு உதவியை அதிகரிப்பதை உறுதி செய்ய வேண்டும் என அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதி கோட்டாபய தனது முன்னாள் இராணுவ படைப்பிரிவின் பல உறுப்பினர்களைப் பதவிகளுக்கு நியமிப்பதன் மூலம் அரசு முழுவதும் தனது கூடாரங்களை எவ்வாறு பரப்பியுள்ளார் என்பதையும், பொலிஸ் மற்றும் உளவுத்துறை நடவடிக்கைகளை அதிகளவில் இராணுவ மயமாக்கியதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மோசடி உள்ளிட்ட கடந்த காலக் குற்றங்கள் தொடர்பாக விசாரித்த பலர் தற்போது அந்தப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்றும் மனித உரிமைகள் குழுக்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, முன்னர் ஊழல் குற்றச்சாட்டு அல்லது போர்க்குற்றங்களில் ஈடுபட்டார்கள் எனக் கூறப்படும் நபர்கள் இப்போது மீண்டும் பதவியில் உள்ளனர் என இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள் என்ற அமைப்பு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ஐ)

# ரத்ன தேரர் சமர்ப்பித்த பிரேரணை கோட்டாவின் கொள்கைக்கு முரண்

## பைஸர் முஸ்தபா விசனம்

கொழும்பு, ஜன. 14

நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் சமர்ப்பித்துள்ள முஸ்லிம் தனிநபர் சட்டத்துக்கு எதிரான பிரேரணை ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்திற்கு முரணான ஒன்றாகும் என நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதிசட்டத்தரணியுமான பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் எண்ணத்துக்கு ஏற்ப சுபீட்சமான இலங்கை, இனவாதமற்ற அரசியல் கொள்கைகளை நடைமுறைப்படுத்த சகல மதங்களையும் மதிக்கக் கூடிய சூழலை ஏற்படுத்தவேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இந்தப் பிரேரணையை ரத்ன தேரர் மீளப்பெற வேண்டும். இவ்விவகாரம் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வந்தால், பல்லினங்களின் கலாசாரங்களை மதிக்கும் அனைவரும் இணைந்து தோற்கடிக்கவேண்டும் எனவும் பைஸர் முஸ்தபா கோரியுள்ளார். (ஐ)


விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத்தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப்பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுத்துப்பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத்தரப்படும்.

THE SASIKA LEARNERS

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.



வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

சசிகா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

தலைமைக் காரியாலயம். இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
HOTLINE: 077 722 6247
0212217678,
0776140361
sasika Learners
sasika driving Schoolgmail.com.

கிளை நிறுவனங்கள்:

வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
0212215472
0703013012

கே.கே.எஸ். வீதி, மல்லாகம்
021224 3393
0703013014

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021225 1664
0703013016

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
0212215472
0703013012


காரைநகர்
021 225 2454,
070 510 2484

பண்டத்தரிப்பு
021 225 2333,
071 255 4135

பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

# இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தில் ஈழத் தமிழரைச் சேர்க்காதது மகிழ்ச்சியே!

## வடக்கு முன்னாள் முதல்வர் விக்கி கூறுகின்றார்



சென்னை, ஜன. 14

இந்தியக் குடியுரிமை திருத்தச் சட்டத்தில் தமிழகத்தில் அகதிகளாக உள்ள இலங்கை தமிழர்களை சேர்க்காத தன் மூலம் அவர்களை இலங்கைக்குத் திரும்ப அழைத்துக் கொள்ள ஒரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதில் தமக்கு மகிழ்ச்சி என வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதல்வரான நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

பேட்டி ஒன்றின்போது பேசிய அவர், நான் கூறும் கருத்து உங்களுக்கு வித்தியாசமாக தோன்றலாம். ஆனால் ஈழத்தில் வசிக்கும் தமிழர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வரும் வேளையில், தமிழகத்தில் அகதிகளாக உள்ள எங்கள் மக்கள் மீண்டும் எங்களிடம் வரவேண்டும். எங்களுடன் வசிக்க வேண்டும் என்றே நாங்கள் விரும்புகிறோம் எனக் கூறியுள்ளார்.

கடந்த 35 வருடங்களுக்குள் சுமார் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள், சூழ்நிலை காரணமாக உலகம் முழுவதும் சென்று வசித்து வருகிறார்கள். இந்நிலையில் தென்னிந்தியாவில் சுமார் 1 லட்சம் ஈழ தமிழர்கள் உள்ளனர். இவர்களாவது தற்போது தாயகம் திரும்பினால், எங்களுக்கு குறைந்து கொண்டே வரும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்து கொள்ள முடியும் – என்றார்.

இலங்கை திரும்பினால் இழந்த அவர்களின் வீடு, நிலம் உள்ளிட்ட சொத்துக்களை திரும்பப் பெற முடியுமா என்ற கேள்விக்கு பதில் அளித்த அவர், சில இடங்களில் உள்ள சொத்துக்களை நிச்சயம் மீட்டு கொள்ளலாம். வேறு சில பகுதிகளில் உள்ள சொத்துகளை மீட்பது என்பதில் சிக்கல் உள்ளது. ஏனெனில் அவற்றை அரசே கையகப்படுத்தி, வேறு மக்களுக்குக் கொடுத்து விட்டது எனக் குறிப்பிட்டார்.

இந்திய மற்றும் இலங்கை அரசுகளின் உதவியுடன் அவர்களின் அடிப்படை உரிமைகளை பெற முடியும் என்னும் நிலையில் தமிழர்கள் இலங்கை திரும்பலாம். ஆனால் தற்போதைய சூழல் அவ்வாறு இல்லாததால் தான் இரட்டைக் குடியுரிமை கோரிக்கை முன்வைக்கப்படுகிறது – என்றார். தொடர்ந்து பேசிய அவர், இரட்டைக் குடியுரிமை தற்போது சட்டத்தின்படி சாத்தியம் இல்லை என்றே கூறப்படுகிறது. இதற்கு காரணம் இந்தியா – இலங்கை இடையே இது தொடர்பாக ஒப்பந்தம் ஏதும் போடப்படவில்லை.

ஈழதமிழர்களைத் திருப்பி அனுப்புகிறோம் என இந்தியா கூறி, அவர்களை ஏற்க இலங்கை மறுத்தால் அது எங்களுக்கு நன்மையே. எப்படியெனில் இலங்கையில் இது மாதிரியான நடவடிக்கைகள் தான் நடைபெறுகின்றன என்று உலக நாடுகளுக்கு வெளிச்சம் போட்டுக் காட்ட முடியும். ஈழதமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கும் விவகாரத்தில் இந்தியா மற்றும் இலங்கை நாடுகள் இணைந்து பேசி செயல்படுத்தலாம் என்ற கருத்தை முன்வைத்தார் விக்னேஸ்வரன்.

மேலும் எங்கள் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கும்பட்சத்தில், எஞ்சி இருக்கும் தமிழர்களின் சொத்துக்கள் மற்றும் நிலங்களையாவது சிங்களவர் வசம் செல்லாமல் தடுத்து நிறுத்த முடியும். இலங்கையில் தமிழர்களுக்கான வாழ்வாதாரம், பாதுகாப்பை உறுதி செய்துவிட்டால், நிச்சயம் அகதிகளாக உள்ள பெரும்பாலான ஈழத்தமிழர்கள் தாயகம் திரும்பி விடுவார்கள் – என்றார். (ஐ)

## சிறுவன் துஷ்பிரயோகம்; ஒருவருக்கு 30 வருட சிறை

கொழும்பு, ஜன. 14

சிறுவன் ஒருவரைப் பாரதூரமான முறையில் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சம்பவத்தில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட வியாபாரி ஒருவருக்கு 30 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சஷி மகேந்திரன் இந்த உத்தரவை நேற்றுப் பிறப்பித்தார்.

கிருலப்பனை பூர்வாராம பகுதியைச் சேர்ந்த நபருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு 06 இலட்சம் ரூபாவை இழப்பீடாக வழங்குமாறு உத்தரவிட்ட நீதிபதி, அதனைச் செலுத்தத் தவறினால் மேலும் 06 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

மேலும், 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிபதி, அதனை செலுத்தாவிட்டால் மேலும் 18 மாதங்கள் சிறைத் தண்டனை உத்தரவை பிறப்பித்துள்ளார். (ஐ)

## யானையில்தான் வருவேன்!

### விஜயகலா அறிவிப்பு



கொழும்பு, ஜன. 14

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நான் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். தேர்தல் தொகுதியில் போட்டியிடுவேன். வேறு எந்தக் கட்சிக்கும் செல்லமாட்டேன் என நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

விஜயகலா மகேஸ்வரன் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார் என்றும், அவருக்குத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் வாய்ப்பு வழங்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பெருமளவு பணம் கேட்டார் என்றும் இணையத்தளங்களில் வெளியான செய்தி தொடர்பில் தெளிவுபடுத்தும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எனது மக்களுக்கான சேவை ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாகவே இருக்கும். எந்தக் கட்சிக்கும் நான் செல்லப் போவதில்லை. அதற்கான பேச்சுக்களும் இடம்பெறவில்லை. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நான் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக யாழ். தேர்தல் தொகுதியில் போட்டியிடுவேன்.

இது தொடர்பில் வெளிவரும் செய்திகள் உண்மைக்கு புறம்பானவை – என்றார். (ஐ)

## ஹெரோய்ன் வியாபாரிக்கு நேற்றுத் தூக்குத் தண்டனை

ஹெரோய்ன் வியாபாரத்தில் ஈடுபட்ட சம்பவத்தில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட நபருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, பொரளை பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபருக்கே கொழும்பு மேல் நீதிமன்றம் இந்தத் தண்டனையை நேற்று விதித்துள்ளது.

13.2 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்து வியாபாரத்தில் ஈடுபட்டார் எனப் பிரதிவாதிக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டில் பிரதிவாதியைக் குற்றாவாளியாக இனங்கண்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலபிட்டிய, தூக்குத் தண்டனை தீர்ப்பை அறிவித்தார்.

2016ஆம் ஆண்டு ஓகஸ்ட் 22ஆம் திகதி மாளிகாவத்தை பகுதியில் வைத்து இந்த நபர் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்
இல.10, மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536
நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.01.2020 இல் வெளியிடப்பெற்றது.